
உ

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

சங்கானைக் கல்விக்கோட்டம்

# சைவ கலாசார மேம்பாட்டு விழா



# சிறப்பு மலர் - 2012

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



# சங்கானை கல்விக் கோட்டம்

# சைவத்திருமுறை விழாவும் சைவநெறித் தொண்டுபடு செயல் நிகழ்ச்சிப் பரிசளிப்பு விழாவும் - 2012

இடம் : யா / சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

காலம் : 08.12.2012 சனிக்கிழமை காலை. 8.00மணி

தலைவர் : செல்வி. அ. சா. மரியாம்பிள்ளை அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், சங்கானை)

# அருளாசிச் செய்தி

சங்கானைக் கல்விக்கோட்ட பணிமனையின் அனுசரணையுள் "சைவகலாச்சாரப் பேரவையினர் வருடந்தோறும் சைவத்திருமுறை விழாவினை சிறப்புடன் நடாத்தி வருகின்றமையை கல்விச் சமூகம் என்னும் பாராட்டத் தவறவில்லை.

அந்த வகையில் சைவசமயத்தின் அடிப்படைத் தத்துவங்களை மாணவர்கள் புரிந்துகொண்டு அவ்வாறு வாழ்க்கையை நெறிப்படுத்துவது முக்கியமாகிறது. சமயம் என்ற பதத்திற்கு நெறி, பாதை, வழி, மார்க்கம், மதம் என்ற கருத்துக்கள் வலுப்பெற்றிருக்கும் நிலையில் இளஞ் சந்ததியினரை வாழ்வாங்கு வாழ்வதற்கு நெறிப்படுத்துவதே சமயம் இது தூய வாழ்வை மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தரும் இந்த அறிவுப் பாதையின் வழி நடப்பவர்களுக்கு ஒளிமயமான வாழ்வு அமையும் என்ற நம்பிக்கையை அறிவாளர் எமக்கு வாட்டியுள்ளார் அனைத்துச் செயல் களும் இறைவனது ஆணையினாலேயே நிகழுகின்றன என்பதனையும், அவன் ஆணைக்கு அடிபணிந்து நல்லனவற்றைச் செய்து, எல்லாவற்றை நீக்கி தனக்கும் பிறருக்கும் பயன்படும் வகையில் வாழ்வதையும் சமயம் என்ற நெறி வற்புறுத்துகின்றது.

எனவே சங்கானைக் கல்விக்கோட்டம் மாணவர்களிடையே இவ்வாறான அறப்பண்புகளை வளர்த்தெடுக்கும் நோக்கில் வருடா வருடம் முன்னெடுத்து வரும் சைவத்திருமுறை விழாவை மிகவும் சிறப்பாக கொண்டாடி வருவரு கல்விச் சமூகத்தினால் போற்றப்பட வேண்டியதொன்றாக உள்ளது. கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிற்றல் என்ற ஐந்து படி நிலைகளையும் மாணவர்கள் அனைவரும் வகுத்துக்கொண்டு சமய வாழ்வு வாழ்வதற்கு கலாசாரப் பேரவையினர் முன்னின்று உழைப்பது எதிர்காலத்தில் ஒரு தலை சிறந்த சமுதாயத்தை ஏற்படுத்த வழிகோலும் என்பதில் ஐயப்பாடு எவருக்கும் இருக்கமுடியாது.

அதியுயர்ந்த இலட்சியத்தை கோட்பாடாகக் கொண்டு கலாசாரப் பேரவையினரின் அதிசிறந்த பணிக்காக தம்மை அர்ப்பணித்து நிற்கும் கோட்டக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள், சமூகநலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை உதிர்ப்பதில் பெருமகிழ் வெய்துகின்றோம்.

வாழ்க மாணவர் சமுதாயம் வளர்க சமயப் பணி

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகள்**
நல்லூர், யாழ்ப்பாணம்.

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் அவர்கள் வழங்கிய

# ஆசிச்செய்தி

ஆண்டுதோறும் ஆன்மிகத்துக்கு பெரும்மதிப்புக் கொடுத்து விழா எடுக்கும் சங்கானைக் கல்விக் கோட்ட சமூகத்தை முதற்கண் வாழ்த்துகின்றேன். சைவ சமயத்தலைவர்களின் உன்னத சொத்தாகிய திருமுறைகளுக்கு விழா எடுத்துப் போற்றும் கைங்கரியம் பெருமைக் குரிய விடயமாகும். இத்தெய்வீக விழாக் குறித்து வெளியிடப்படும் மலருக்கு ஆசி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். மாணவர்கள் மத்தியில் ஆன்மீக நெறிமுறையை வளர்க்க வேண்டிய தேவை அதிகரித்துள்ளமையை அனைவரும் அறிவர். அவ்வகையில் சங்கானைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்களின் அயராத முயற்சியால் நடைபெறும் சங்கானைக் கல்விக் கோட்ட திருமுறைப் பெருவிழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



## சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றிய தலைவர் அவர்களின் ஆசிச்செய்தி

சங்கானைக் கல்விக் கோட்டம் ஆண்டுதோறும் சமயப் பெருவிழா வினை நடாத்தி நல்லதொரு சமூகத்தினை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. இது என்றென்றும் பாராட்டத்தக்க தாகும். காலத்தின் தேவையுமாகும். மாணவர்களை ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபட வைத்தும் அவர்களது மனத்தினையும் ஆன்மீகப் பாதையில் ஈர்க்கச் செய்யும் விதத்திலும் விழாவினை நடாத்தி வருவது வரவேற்கத்தக்கதாகும்.

மக்கள் இன்று நல்லவைகளை விட்டு விலகி வருகின்றார்கள். அவர்கள் விரும்பத்தகாத வேண்டாதனவற்றில் அதிக நாட்டமும் ஈடுபாடும் உடையவர்களாக மாறி வருவதைக் காணமுடிகின்றது. இத்தகைய கால மாற்றத்திற்கு இவ்வாறான விழாக்கள் மிக அவசிய மாகும். இதன் மூலம் நல்லொழுக்கமுள்ள அன்பு நிறைந்த சமய நம்பிக்கை உடைய நல்லதொரு சமூகத்தினை மிகவிரைவில் நாம் காண முடியும்.

இப்பெரு முயற்சியில் ஈடுபட்டு பணியாற்றிவரும் சங்கானைக் கோட்ட சமூகத்தினருக்கும் அவர்களுக்கு உறுதுணையாக நிற்கும் பொது மக்களுக்கும் என்றும் இறையருள் கிடைக்க வேண்டி ஆசீர்வதித்து நிறைவு செய்கின்றேன்.

சுபம்

**சிவஸ்ரீ சபா. வாசுதேவக்குருக்கள்**
சிவன் தேவஸ்தானம்,
சித்தன்கேணி.
07.11.2012



# வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து....

சங்கானைக் கல்விக்கோட்டத்தின் சைவ கலாசார மேம்பாட்டுப் பேரவையினால் வருடாவருடம் நடைபெற்று வரும் சைவத்திருமுறை விழாவிற்கான சிறப்பு மலரின் 16வது இதழ் முகிழ்கின்ற வேளையிலே அகம் மலர்ந்து இவ்வாழ்த்துரையை இதயம் நெகிழ்ந்து வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

என்ற பாரம்பரியத்திற்கமைய முன்னெடுக்கப்பட்டு வரும் சைவத் திருமுறைகளின் மனனம், சைவத் தொண்டுபடும் செயன்முறைப் போட்டி, புராண படனம், கதாப் பிரசங்கம் மற்றும் மாணவர்களின் சைவ நெறிசார் திறன்களை மதிப்பிடும் போட்டிகளை நடாத்தி வருவதுடன் மாணவ சமுதாயத்தின் கல்வி வளர்ச்சியோடு சமய, சமூக பணிகளையும் இக் கலாசார பேரவை முன்னெடுத்துச் செல்வது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும்.

கற்றுப் பொருள் உணர்வதற்கு அரிய சமய சாஸ்திரங்களை அறிஞர்கள் தம் ஆய்வுக் கட்டுரைகள் மூலம் எளிதாக உணர்த்தும் சாதனமாகத் திகழ்வதே சமய சிறப்பு மலருக்கு இருக்க வேண்டிய சிறப்பு இயல்பாகும். அந்தவகையிலே இம் மலரும் சைவ நெறிமுறைகளை கடைப்பிடிப்பவர்கள் மத்தியிலே சிறந்த நூலாக தவழ வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

மேலும் இம் மலர் வெளியீட்டிற்கு நேரடியாகவும், மறைமுகமாக வும் தமது ஆக்கபூர்வமான செயற்பாடுகளை வழங்கிவரும் வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக கல்விப் பணிபபாளர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விச் சமூகத்தினர், மற்றும் ஆர்வலர்கள் யாவரையும் இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்தி இனிவரும் காலங்களில் தமது அறப்பணிகளைத் தொடர்ந்து இடைவிடாது செய்ய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தி இச் சிறப்பு மலர் வெளியீடு சிறப்புற அமைய எனது நல்லாசிகளை வழங்கி நிற்கின்றேன்.

"தொடர்க நற்பணி"

***சி. சத்தியசீலன்***
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவர்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

# வாழ்த்துச்செய்தி

சங்கானைக் கல்விக்கோட்ட ஆதரவில் வருடாவருடம் இடம்பெறும் சைவ கலாசார மேம்பாடு விழாவானது கல்விச் சமூகத்தின் அனுசரணையுடனும் மாணவர்களின் ஒத்துழைப்புடனும் மிகவும் சிறப்பான முறையில் நடாத்தி வருவது கண்டு நான் மகிழ்வெய்து கின்றேன்.

மாணவர்களின் இளமைக்காலம் பொன்னானது பாடசாலைக் கல்வி ஊடாக மாணவர்களிடையே ஒழுக்கநெறி, அறநெறி உணர்வு, மனிதநேயம் என்ற இன்னோரன்ன அறப்பண்புகளை வளர்த்தெடுப்பது இக்கலாசார விழாவின் மையப் பொருளாக இருந்து வருகின்றமையை பேரவையினரின் செயற்பாடுகளிலிருந்து அறியமுடிகின்றது. இத்துடன் மட்டுமல்லாது அன்பு, கருணை, ஜீவகாருண்ணியம், இறையுணர்வு பரந்துபட்ட மனப்பாங்கு, சமூகப்பற்று செயற்றிறன், ஒருமைப்பாடு ஆகிய சமூக விழுமியங்களையும் மாணவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் பேரவையினர் பல்வேறு மட்டங்களில் போட்டிகளை நடாத்தி வருவது இக்கால மாணவர்களின் முன்னேற்றத்திற்கான அரிய பணியாகவும் அமைந்துள்ளன.

அந்தவகையில் சங்கானைக் கல்விக்கோட்ட சைவகலாசார பேரவையின் சமயப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் பூரண ஒத்துழைப்பும் நல்லாசியும் கிடைக்க வேண்டி இறைவனை பிரார்த்தித்து எனது வாழ்த்துச் செய்தியை இனிதே நிறைவு செய்கின்றேன்.

வாழ்க சமயப்பணி! வளர்க மாணவர் சமுதாயம்

**ப. விக்கினேஸ்வரன்**
பிரதி செயலாளர்
மாகாணக் கல்வி அமைச்சு,
வடமாகாணம்.



# வாழ்த்துரை

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

சங்கானைக் கோட்டக் கல்வி அலுவலகத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் சைவத்திருமுறை விழாவிற்கான சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

சைவமும் தமிழும் மிகவும் தொன்மைவாய்ந்தவை. இத்தகு தொன்மை வேறு சமயங்களுக்கில்லை. சைவத்தின் பெருமையை என்றும் பறை சாற்றிநிற்பவை பன்னிரு திருமுறைகள். திருமுறைகளை வகுத்தவர் நம்பியாண்டார் நம்பி. இத்திருமுறைகள் சைவத்தின் பெருமையை உலகமெங்கும் பரப்புகின்றன. இன்று தமிழினம் தனித்தன்மை கெடாமல் தலைநிமிர்ந்து வீரத்துடனும், விவேகத்துடனும், மதிப்புடனும் வாழ்ந்து வருவதற்கு திருமுறைகளே வழிகாட்டின. தனி மனிதனொருவன் தனது நிலையில் நின்று அன்புவழியில், நீதி தவறாது தனது கடமைகளைச் செய்யத் திருமுறைகள் வழிகாட்டுகின்றன. இத்தகு சிறப்புக்கள் கொண்ட திருமுறைகளுக்கு விழாவெடுக்கும் சங்கானைக் கல்விக்கோட்டச் சைவ கலாசார மேம்பாட்டுப் பேரவைக்கு எனது பாராட்டுக்கள். நம்மிடையே அருகிவரும் மக்கட்பண்பை மலர்வடையச் செய்யவும், வக்கிரகுணத்தை அகற்றவும் திருமுறை விழா உதவுமெனத் திடமாக நம்புகிறேன்.

**வ. செல்வராசா**
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
வடமாகாணம்.



# வளர்க நற்பணி

ஆன்மிகம் எமது வாழ்வுடன் இணைந்தது; எமது வாழ்விற்கு நல்வழி காட்டுவது; ஆன்மிகம் இல்லாத எச்செயலும் முழுமைபெறாது என்பது எமது நம்பிக்கை. ஆன்மிகம் இல்லாத கல்வியும் அவ்வாறானதே.

எமது சிறார்களுக்கான கல்வி பண்டுதொட்டு ஆன்மிகச் சூழலிலேயே வழங்கப்பட்டு வந்துள்ளது. குருகுலக் கல்வியில் ஆரம்பமான இச்செல்நெறி இன்றும் தொடர்கிறது. அவ்வகையில் இன்றும் சில சமயம்சார் பொது அமைப்புக்கள் தாம் சார்ந்த சூழலை ஆன்மிகநெறியில் வழிப்படுத்துவதற்கு அரும்பணியாற்றி வருகின்றன.

எமது கலைத்திட்டத்தில் சமயமும் முக்கிய இடத்தை வகிக் கின்றது. இப்பாடம் கற்பிப்பதற்கான நோக்கமாக பல்வேறு சமய விழுமியம் சார்ந்த குறிக்கோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் எவ்விடத்திலும் பரீட்சையில் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் எவ்விடத்திலும் பரீட்சையில் சித்தியடைவதான நோக்கம் குறிப்பிடப்ப படவில்லை. இவ்வகையில் சங்கானைக் கல்விக்கோட்டக் கலாசார மேம்பாட்டுப் பேரவை சமய விழுமியம்சார் நோக்கங்களை அடிப்படை யாகக் கொண்டு பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை பாராட்டுக்குரிய விடயமாகும். இங்குள்ள சைவச் சிறார்கள் நல்லதொரு ஆன்மிகச் சூழலில் வளர்த்தெடுக்கப்படுகிறார்கள்.

இவர்களால் முன்னெடுக்கப்படும் விழாவினை பத்திரிகை வாயிலாக கடந்த சில ஆண்டுகளில் அறிந்திருந்தேன். அண்மைய ஆண்டுகளில் இவற்றினை நேரில் காணும் வாய்ப்புக் கிட்டியது. எமது சிறார்களக்கு சமயம் சார்ந்த உன்னத நெறிகளை இவ்விழா போதிப்பதுடன், அவர்களை நற்பிரஜைகளாக்கும் வழியினையும் காட்டி நிற்கின்றது. சங்கானைக் கல்விக்கோட்டத்தின் முன்மாதிரியான இப்பணியைப் பாராட்டுவதுடன் இதனை முன்னெடுத்துவரும் கல்விச் சமூகத்தினரையும் வாழ்த்துகின்றேன். அவர்களின் இவ் அரும்பணி தழைத்தோங்க வேண்டுமென எல்லாம் வல்ல அரும்பொருளைப் பிரார்த்திக்கின்றேன்.

**அன்புடன்**
**ஆ. ராஜேந்திரன்**
வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம் வலயம்.

## வலி – மேற்கு பிரதேச செயலர்
## அவர்கள் வழங்கிய
# வாழ்த்துச் செய்தி

சங்கானை கல்விக் கோட்டத்தின் சைவ கலாசார மேம்பாட்டுப் பேரவையால் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வருகின்ற சைவத் திருமுறை விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். வலிகாமம் மேற்கு பிரதேசம் சைவத்தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியங்களை நிறைவாகக் கொண்டதாகும். சைவ மக்களையும் சிவாலயங்களையும் கூடுதலாக உடைய இப்பிரதேசத்தில் சமயம் சார்ந்த விழாக்கள், சடங்குகள், கிரியைகளுக்குக் குறைவில்லை. இந்த வகையிலேயே மேற்படி விழாவும் இங்கு வருடந்தோறும் நடைபெறுவது யாவரும் அறிந்ததே.

ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியாக விளங்குகின்ற சிவனை முதற்பரம்பொருளாகக் கொண்ட சைவசமயம் இந்தியாவிலும் ஈழத்திலும் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் சிறப்புற்று விளங்குகின்றது. இச்சமயத்தின் அரும்பெரும் பொக்கிஷமாக திருமுறைகள் உள்ளன. இவற்றைப் போற்றிப் பாதுகாப்பதும் அடுத்த தலைமுறைக்குக் கையளிப்பதும் ஒவ்வொரு இந்துவினதும் தலையாய கடமையாகும். இத்தகைய முயற்சியைக் காலத்தின் தேவை கருதி வருடாவருடம் சைவத்திரு விழாவாக மேற்படி கல்விக்கோட்டத்தினர் மேற்கொண்டு வருகின்றமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அந்தவகையில் பலரின் கூட்டுமுயற்சியாக கூட்டுப்பொறுப்பாக மேற்கொள்ளப்படும் இவ்விழா இனிது நிறைவேற வேண்டும். இதற்கு இறைவனின் திருவருள் கிடைக்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**திரு. அ. சோதிநாதன்**
பிரதேச செயலர்
வலி மேற்கு,
சங்கானை.



# வாழ்த்துச் செய்தி

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" எமது பிரதேசத்திற்கு உட்பட்ட சங்கானைக் கல்விக்கோட்ட சைவ கலாசார மேம்பாட்டு பேரவை வருடாவருடம் நடைபெறும் சைவத்திருமுறை விழாவை முன்னிட்டு வெளியிடும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். சமகாலத்தில் இந்து மதம் சார்ந்த பண்பாட்டையும் கலாசாரத்தையும் பேணிப்பாதுகாக்கும் கடமை சமூகத்திலுள்ள அனைவருக்கும் பொறுப்பாக்கப்பட்ட ஓர் விடயமாகவே கருதுகின்றேன். இன்று வேகமாக ஏற்பட்டுவரும் பண்பாட்டுக் கலப்பின் வாயிலாக எமது சமூகத்தால் இதுவரை காவி வரப்பட்ட அரும் பொக்கிஷங்களான சைவ கலாசார விடயங்கள் தமது தனித்துவத்தையும் தூய்மையையும் இழந்துவிடக்கூடிய நிலைக்கு மாற்றம் அடைந்து வருவது இன்று பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. இந்த வகையில் மேற்குறிப்பிட்ட சைத்திருமுறை விழா போன்ற விழாக்களுக்கு ஊடாக எமது எதிர்கால சந்ததிகளின் பிஞ்சு உள்ளத்தில் எமது கலாசார விழுமியங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளை இப்பிரதேசத்தின் தவிசாளர் என்ற வகையில் பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன். மேற்படி நிகழ்வில் தம்மை அர்ப்பணித்துள்ள அனைத்து அன்பு உள்ளங்களிற்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளை காணிக்கையாக்குகின்றேன்.

மேற்படி சிறப்புமலர் பொலிவுபெற என்றும் என் நல் வாழ்த்துக்கள்.

என்றும் மக்கள் சேவையில்
**திருமதி நா. ஐங்கரன்**
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.



# வாழ்த்துச் செய்தி

சங்கானைக் கல்விக் கோட்டத்தினால் ஆண்டுதோறும் நடாத்தப் படும் சைவ கலாசார மேம்பாட்டு விழாவில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அன்று! சமயத்தினூடே மொழியும் இலக்கியமும், கலையும், கலைநயமும் வளர்த்தெடுக்கப்பட்டதென்பதை நாமறிவோம். அத்தோடு, எமது பண்பாடு, ஒழுக்கம், சமூக விழுமியங்கள், ஆன்மீகம், விஞ்ஞானம் அத்தனைக்கும் அடித்தளமிட்டதும், அனைத்துக்கும் ஆணிவேரும் மதங்கள் தான் என்றால் மிகையாகாது. இன்று ஆன்மீகத்தையும், ஒழுக்கத்தையும், இறைநம்பிக்கையையும், மனிதப் பண்புகளையும் மனச்சாட்சிகளையும் தொலைத்துவிட்ட நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் அவற்றை அழியாது பாதுகாத்து வளர்த்தெடுக்க வேண்டியது எம் மதங்களினது பாரிய கடமையாகும்.

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டது "சைவம்" "சிவ! சிவ!" என்றிட தீவினை மாறும் என்கின்றார் திருமூலர். எனவே, உண்மை யில் உள்ளார்ந்த ரீதியாக சிவனை நேசிக்கும் மனிதர்களாக நாம் மாறுவோம். அப்போதுதான் எம்மைச் சூழவுள்ள தீவினை மாறும். அது எம்மைவிட்டு அகலும். நாமும் இறைபக்தியுள்ளவர்களாக மாறுவதுடன் எம் பிள்ளைகளையும், எம்மைச் சார்ந்த சமூகத்தையும் எம்மைச் சூழவுள்ளவர்களையும் இறைபக்தி, இறை நம்பிக்கை, தெய்வ பயம் உள்ளவர்களாக மாற்றுவோம்.

**"கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்**
**நல்லான் அடக்கம் உடையான் நடுச்செய்ய வல்லான்**
**பகுத்து உண்பான் மாசிலான் கள் காமம் இல்லான்**
**இமயத்திடையில் நின்றானே"** என்று ஒரு நல்ல பக்தனுக்குரிய பண்புகளைக் கோடிட்டுக் காட்டி நிற்கின்றது திருமந்திர ஆகமப் பாடல். எனவே! மேற்கூறப்பட்ட நல்ல பக்தனுக்குரிய நற்பண்புகளைக் கடைப்பிடித்து இமயத்திடை வீற்றிருக்கும் சிவனுக்குரிய சைவர்களாக மாறவும் எம் சமூகம் பல்துறையிலும் மேம்படவும், இறையருள் கேட்டு உங்கள் அனைவரதும் இறை தொண்டு சிறக்கவும் இறைதொண்டனாய் வாழவும் அதில் நீங்கள் வளரவும், மகிழவும் வாழ்த்துகின்றேன்.

**செல்வி அ.சா. மரியாம்பிள்ளை**
கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
சங்கானைக் கல்விக்கோட்டம்,
சங்கானை.

# வாழ்த்துரை

சங்கானைக் கல்விக் கோட்டத்தினரால் வருடந்தோறும் தவறாது நிகழ்வுபடுத்தப்படும் சைவ கலாசார மேம்பாட்டு விழாவானது இம் மண்ணில் இடம்பெறும் சமூக கலாசார வெளிப்பாட்டு நிகழ்ச்சிகளில் தலையாயதானதாக நிகழ்கின்றது. இறை உண்மை தெளிதல், சைவ தத்துவங்களைப் புரிதல் தொண்டுபடுதல், சைவ கலை இலக்கிய திறன்களை வெளிப்படுத்தல். ஆகிய சமய விழுமியங்களை தமது பாடசாலைக் கால கற்றல் மட்டத்திலே பயின்று வெளிப்படுத்தி சாதனை யாளர் ஆக மாறும் பெரும் வாய்ப்பை மாணவர்களக்கு இந்நிகழ்வு வழங்குகின்றது என்றால் எவரும் மறுப்பதற்கில்லை.

இத்தகைய சமூக சமய அணியாக்க நிகழ்வுகளில் மக்கள் மனதறிந்த நிறுவனமாக விளங்கும் மக்கள் வங்கி சங்கானை கிளைக்கும் பங்களிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமை பெரும் வாய்ப்பென்றே கருது கின்றேன். இளம் பிள்ளைகட்கான சேமிப்பு கணக்குகள், புலமைப்பரிசில் பாராட்டு ஏற்பாடுகள், மாணவர் வங்கிச் சேவை நிலையம் போன்ற வங்கியில் நடைமுறைகளை பாடசாலை மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தி அவர்களிடைடே யஅதன் செயற்பாட்டுப் பழக்கத்தை எமது வங்கி ஏற்படுத்தி பெரும் நிலையில் சைகலாச்சார தொண்டுபடு விழாவில் நாம் இணைந்து கொள்வதில் பெரும் மகிழ்வடைகின்றோம். பல்வேறு தோற்றப்பாடுகளில் பரிணமிக்கும் இப்பெருவிழா சங்கானைக் கல்விக் கோட்டத்தினரால் வலிமேற்கு மண்ணில் கொண்டாடப்படுவதும் ஒரு தலையாய தொண்டு படு நிலையாகும். அவர்களின் இப்பெரும் இறைபணி சிறக்க சிவனடிதாழ்ந்து சிந்தை மகிழ்ந்து சீருடன் வாழ்த்தி சிரம் வணங்கி அமைகின்றேன்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**திரு.தி.சிவகுமாரன்**
முகாமையாளர்
மக்கள் வங்கி சங்கானைக்கிளை



## சிவப்பொலிவோடு திகழ்ந்த
# அமரர் சிவசண்முகமூர்த்தி

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி ஆசிரியரும் வலிகாமம் கல்வி வலய சமயபாட ஆலோசகரும் பிரசங்க பூசணம் கலாபூசணம் நடேசன் சிவசண்முகமூர்த்தி திருமுரு கிருபானந்த வாரிதியின் சீடருமாவார். வலிகாமம் பகுதியில் சைவ சமய பிரசாங்கங்களைச் செய்தவர். எந்நேரமும் சிவப்பொலிவோடு திகழ்ந்தவர். அன்னாரின் இழப்பு வலிகாமப் பகுதி கலை கலாசாரத் துறைக்கு மட்டுமல்ல இசைத்துறைக் கும் பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா இறைநிழலில் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**- விழாக்குழு**

## சைவத்திருமுறை விழாச் செயற்குழு

**செல்வி அ. சா. மரியாம்பிள்ளை - தலைவர்**
(சங்கானை கோட்டக்கல்விப்பணிப்பாளர்)

**திரு. வே. சிவசுந்தரம்** (அதிபர்) **- செயலாளர்**

**திரு. ந. சிவசுப்பிரமணியம்** (அதிபர்) **- பொருளாளர்**

**திரு. ந. சபாரட்ணசிங்கி** (அதிபர்) **- போடிச் செயலாளர்**


**செல்வி நா. ஜெயராணி** (அதிபர்)

**திரு. ஆ. பேரின்பநாயகம்** (அதிபர்)

**திரு. சு. கணேசதாசன்** (அதிபர்)

**திருமதி ந. சுலபாமதி** (அதிபர்)

**திரு. கணேசானந்தன்** (அதிபர்)



# அமரர் கலாபூஷணம் கந்தையா நாகப்பு
## வட்டுக்கோட்டை



முற்கால புராணங்கள், காப்பியங்கள், இதிகாசங்கள் இலக்கிய நூல்கள் போன்றவற்றில் பொதிந்திருந்த உயரிய தத்துவங்களைப் படித்து, சுவைத்து படித்தவர்கள், பாமரர் என்ற வித்தியாசமின்றி அனைத்து மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் நாடகமாய், இசையாய், கூத்துக்களாக மக்களுக்குத் தந்த அரும்பெரும் கலைஞர் வரிசையில் வட்டு மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட கலாபூஷணம் கந்தையா நாகப்பு விளங்குகின்றார்.

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட பழங்குடி மக்கள் வடமோடிக் கலையினையும், பெறுமதிமிக்க கிராமியக் கலைகளையும் பேணிக் காத்து வந்துள்ளளனர். இவ்வகை சிறப்புமிக்க நாட்டுக்கூத்து அமரர் கந்தையா நாகப்பு அவர்களினால் இளைய தலைமுறையினருக்கு கையளிக்கப்படவேண்டுமென்பதில் அனை வருக்கும் ஒருமைப்பாடு காண்பதற்கு ஊக்கமளிக்கும் வகையில் எழுதா மறையாக விளங்கிய, காலத்தால் அழியாமல் இருப்பதற்கு நூல்வடிவில் எடுக்கப்பட்ட முயற்சிகள் நாம் அமருக்குச் செய்யும் பாரிய நன்றிக் கடமையாகும்.

அமரர் பள்ளிப் பருவத்தில் பல வகையான கதைகளை எழுதி முடித்தார். அந்த வகையில் ஏழையின் காதல், காதலும் விளக்கமும் என்னும் கட்டுரை நூலை எழுதி வெளியிட்டவர். அகிலன் எழுதியா "நெஞ்சின் அலைகள்" என்ற நாவலை நாடகமாக்கி வட்டு சிவன் ஆலயத்தில் அரங்கேற்றினார். கிராம மக்கள் தமது சமூக சமய கலை அம்சங்களை வெளிப்படுத்தும் வகையில் மிகவும் எளிமையான முறையியல் கிராமியக் கூத்துக்களை மேடையேற்றி வடிமோடிக் கூத்துக்கு பெருமை சேர்த்தார்.

அமரர் நாகப்பு அவர்கள் கூத்துக் கலையில் தேர்ச்சி பெற்றிருப் பதைப் போல் உருவங்கள் செய்வதிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். வடமாகாண நிகழ்வுகள் பலவற்றிலும் அவரது பொம்மைகள், குதிரைகள் இன்னும் காணக்கூடியதாகவுள்ளது. அமரர் அவர்களுடைய படைப்புத் திறன்களுள் எல்லோராலும் புகழ்ந்து பாராட்டப்பட்ட "தருமபுரத்திரன்" நாடகம் பல மேடைகளில் அரங்கேற்றம் பெற்று இன்னும் மக்கள் மனதில் அவரது நடிப்புத்திறன் நீங்காமல் அவரது புகழ் பேசப்பட்டு வருகின்றமை நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டிய ஒன்றாக அமைந்துவிட்டது.

மேலும் தருமபுத்திரன் நாடகம் 1961ஆம் ஆண்டு முதல் பல இடங்களில் மேடையேற்றப்பட்டு ஏறக்குறைய 1976ஆம் ஆண்டு வரை பல மேடைகளில் களமாடி வெற்றிவாகை சூடியுள்ளது. அனைத்து இன மக்களினாலும் கலாசார வேறுபாடின்றி வரவேற்கப்பட்டது. அமரரது நடிப்புத்திறன்கள் குறிப்பாக நாடகத்தில் ஏற்று நடிக்கும் பாத்திரங்களில் தம்மை மறந்து அவ்வப் பாத்திரங்களிலே தம்மை அர்ப்பணித்துள்ளார். அமரரது வாழ்க்கை வட்டம் கலை அம்சம் மிக்கதாக அமைந்து தான் பெற்ற அனுபவங்களினூடாக இளைய தலைமுறையினரும் கையளித்த பெருமை இவர்களையே சாரும். வட்டு சனசமூக நிலையத்தில் இது சம்பந்தமாக இக்கலையுணர்வை பகிர்ந்தளிப்பதற்கு முன்வந்து சங்கத் தினால் முதன்முதலாக 1961ஆம் ஆண்டு அரங்கேற்றினார். ஒவ்வொரு வகைக் கூத்திலும் தனித்துவம் மாறக்கூடாது என்பதால் அமரர் கூடிய கவனம் செலுத்தி வந்துள்ளார். கிராமியக் கூத்தங்களும் கிராம மக்களும், அரசளிறு விளங்கும், பொது நிறுவனங்களும் கூத்தின் பல பற்றுள்ள உயர் கல்விமான்களும் அனைத்துவகையினர் உதவிகளையும், ஊக்கங்களையும் அனைத்துப் பெருமை கண்டவை. பொம்மலாட்டம், அனுமன் ஆட்டம், கூத்துக்குவிய இசைக் கருவிகள், கூத்துக்கான ஒப்பனைப் பொருட்கள் கிராமியக் கலைகளுக்கான முகடிமூடிகளும் வேடு உடுப்புக்களும் நாட்டுக்கூத்துக்குரிய கைப்பொருட்கள், கிராமிய கலைகளுக்கான கரகாட்டத்திற்குரிய வேடு உடைகள் ஆகியவற்றில் அமரரது கைவண்ணம் பெரும் பங்கு வகித்திருந்தது சிறப்பம்சமும் கலைஞர்கள் தமக்கு வேண்டிய பல்வகை உபகரணங்கள் வேறிடத்தில் இருந்து பெற்றுக்கொள்வது வழக்கம் ஆனால் அமரர் அவர்கள் அவ்வாறில்லாம் தமது அனுபவ முதிர்ச்சியினாலும், நிறைந்த ஆற்றுகை யினாலும் இவ் வகையான உபகரணங்கள் தாமே ஆக்கிக் கொண்டார் கள். இது கிராமிய கலைத்துறையில் அமரது ஆழமான பற்றுதியை வெளிப்படுத்தி நிற்கின்றது.

சகல கலா வல்லுனனாக கலைத்துறையில் பிரகாசித்த அமரர் கலாபூஷணம் நாகப்பு அவர்களின் வழிநின்று கிராமியக் கலைகளைப் பற்றுதியுடன் இளைய தலைமுறையினருக்கு பாரம்பரியத்துடன் கையளித்து எதிர்காலத்தில் கிராமியக் கலைகளுக்கு ஆக்கமும், ஊக்க மும் அமைப்பது ஒவ்வொரு தமிழ் மக்களினதும் தலையாக கடமையாக இருப்பதோடு, அமரரின் வழிகாட்டலில் நாமனைவரும் செயற்பாட்டு தர்ம வீரரின் கலையுணர்வை வளர்த்தெடுப்பதே அமரருக்கு நாம் செய்யும் நன்றிக் கடமையாகும்.

வாழ்க தமிழ் மொழி வளர்க கலையுலகம்

**திருமதி காசிநாதன் நிரூபா**
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், சங்கானை.

## எண்ணெய் கொப்பளித்தல்

உயிர் காக்கும் பயிற்சிகளில் உன்னதமானது இவ்வெளிய முறை எண்ணெய் கொப்பளித்தல் பயிற்சி. இப்பயிற்சிபற்றி சிலர் அறிந்து இருப்பீர்கள். தினமும் காலை 10 மி. லீட்டர் எண்ணெய்யை சுமார் 15 நிமிடம் கொப்பளித்து வந்த எண்ணற்ற நோய்களில் இருந்து விடுதலை பெற்று உள்ளார்கள் என்றால் நமக்கு ஆச்சரியம் அளிக்கிறது அல்லவா?

நம்புவதற்குக் கடினமான ஆனால் அனுபவத்தில் உணர்நது அனைவரையும் ஒப்புக்கொள்கின்ற எளியமுறைப் பயிற்சியே எண்ணெய் கொப்பளித்தல் (Oil Pulling) ஆகும்.

சோவியத்து ஒன்றியத்தைச் சேர்நத ஞச. மெத்கராஸ் என்ற பெரியார் இதை அறிந்து உலகிற்கு அருளியுள்ளார். அவருடைய கருத்துப்படி இருதய நோயிலிருந்து புற்றுநோய்வரை உடலில் தோன்றும் பல வகையான நோய்களை இந்த எளிய எண்ணெய் மருத்துவத்தால் தீர்த்துக்கொள்ள முடியும் என்கிறார்.

தென் இந்தியாவில் இந்த எண்ணெய் கொப்பளித்தல் பயிற்சியை மக்களிடையே பெரும் அளவில் விளம்பரம் செய்து பரப்பிய பெருமகனார் பெண்களூரில் வசிக்கும் கர்னல் தும்மல கோட்டேஷ்வராவ் ஆவார். இவர் பல ஆய்டுகளாக ஆஸ்துமாவால் துன்பப்பட்டு வந்தவர் எண்ணெய் கொப்பளித்தல் பயிற்சியால் ஆச்சரியம் அடையும் வகையில் குணம் பெற்றதோடு அல்லாமல் தன் குடும்பத்தில் உள்ளவர்களும் பல நோய்களில் இருந்து குணம் பெற்றதால் "தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என இதைபலவாறாகப் பரப்பினார்.

இதை நான் அறிந்து சில மாதங்களாகச் செய்து வந்தபோது இதனால் என்னுள் ஏற்பட்ட மாற்றம் இதை நம்ப வைத்தது. நண்பர்கள் சிலரும் இதைச் செய்து வந்தார்கள். எல்லோரும் ஒரு சிலநாட்களிலேயே உடல் நலத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். முக்கியமாகப் பலருக்கு, ஒரு மாதம் எண்ணெய் கொப்பளித்தல் பயிற்சியில் உடல் எடை சில கிலோ கிராம் குறைந்துள்ளது.

மருத்துவர்களின் ஆலோசனையோடு இதைப்பற்றிய விஞ்ஞான உண்மைகளை அனைவருக்கும் தெரிவிக்க எண்ணி கர்னல் திரு. தும்மல

கோழலஸ்வராவ் அவர்களோடு தொலைபேசியில் தொடர்புகொண்டேன் அவரும் மகிழ்ச்சியோடு வாழ்த்துத் தெரிவித்து வேண்டிய உதவிகளை யும் அளிப்பதாகக் கூறினார்.

இதைச் செய்வதற்கு மிகக் குறைந்த செலவுதான். ஒரு நாளைக்கு சுமார் ஐம்பது பைசாதான். பின் விளைவு இல்லை. நேரமும் அதிகம் தேவையில்லை. ஓராண்டுக்குள் அனைத்து நோய்களும் தீரும் என்கிறார் Dr. மெத்கரஸ். பிறகு எனன, செய்து பார்த்துவிட வேண்டியது தானே!

செய்முறை தெரிந்து கொண்டால் பலனை விரைவில் எதிர்பார்க்கலாம். பிறகு தீரும் நோய்களைப் பற்றியும், மருத்துவர்களின் விளக்கத்தையும் காணலாம்.

**செயல்முறை:**

காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றில் எண்ணெய் கொப்பளித்தலைத் தொடங்க வேண்டும். பல் தேய்த்துவிட்டு செய்வது சிறப்பானது. சுத்தமான நல்லெண்ணெய் அல்லது சூரியகாந்தி எண்ணெய் (Refinod Oil) சுமார் 10 மில்லி லீட்டர் வாயில் விட்டுக்கொள்ள வேண்டும். எண்ணெய் விழுங்குதல் கூடாது. தண்ணீரைக் கொப்பளிப் பதைப்போலவே எண்ணெய்ய வாயில் கொப்பளிக்க வேண்டும். அது வாய் முழுவதும் பல் இடுக்குகளிலும் புகுந்து அலையட்டும். மெதுவர்க்க ஒரே சீராக வாய் வலிக்காமல் இதைச் செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்யும்பொழுது வாயில் ஊறும் சலவாய் நீருடன் சேர்ந்து, ஐந்து நிமிடத்தில் எண்ணெய் நீர்த்து, நுரைத்து, வெண்மையாகி, கனம் குறைந்து எளிதாகச் சுற்றி அலைந்து கொண்டிருக்கும். மேலும் ஒரு 10 நிமிடம் பத்திரிகை படித்துக்கொண்டோ, அல்லது ஒரு வேலையைக் கவனித்துக் கொண்டோகூட செய்துவிடலாம். 15ஆவது நிமிடத்தில் எண்ணெயை உமிழ்ந்துவிட வேண்டும். மேலும் முறை உமிழ்நது எண்ணெயைத்துப்பிவிட வேண்டும்.

பிறகு வாயை நீரால் சில முறை கொப்பளித்துத் தூய்மைசெய்ய வேண்டும். இதனால் பல் இடுக்குகளில் இருந்து கிருமிகள் (Germs) அனைத்தும் வெளியேறுகின்றன. அதன் பிறகு நீர் அருந்துதல், தெனீர் அருந்துதல் செய்யலாம்.

உடலில் தீவிரமான நோய் உள்ளவர்கள் காலை, மதியம், இரவு என உணவுக்கு முன்பு மூன்று வேளையும் தவறாமல் செய்மு வரவேண்டும்.

வீட்டில் எண்ணெய் இருக்கிறது. உடலில் நோய் இருக்கியது? செய்ய மனம் இருந்தால் போகாதோ நோய்! இதில் உள்ள விஞ்ஞான விளக்கத்தைக் காண்போம்.

**இந்த எளிய பயிற்சி அரிய பலன்களைத் தருவதற்கான காரணங்கள்:**

1. எண்ணெய் கொப்பளிக்கும்போது தைராய்டுமற்றும் பாரா தைராய்டு சுரப்பிகள் சீரான இயக்கம் பெறுகின்றன. இதனால் உடலில் அசுர வளர்ச்சி கட்டுப்படுத்தப்படுகின்றது. அதிகஎடையுள்ளவர்கள் மூன்று மாதத்தில் 5 கிலோவரை குறைந்துள்ளதாக அனுபவத்தில் கூறுகிறார்கள்.

2. தைராய்டு சுரப்பி விண்ஞக்குரிய மையம் என்பதால் அதன் இயக்கத்தால் இயற்கையில் இருந்து ஆற்றலை எடுத்துக்கொள்ளும் தன்மை கூடுகிறது. அதனால் உட்கொள்ளும் உணவில் அளவும் தானே குறைகிறது.

3. வாயின் சீரான அசைவினால் நரம்பு மண்டலம் ஊக்கப்படுகின்றது. மின் குறுக்கு நீக்கப்படுவதால் உடல் நோய்கள் விலகுகின்றன.

4. இரத்த நாளங்களில் உள்ள கொழுப்பு அடைப்புகள் நீக்கப்படுவதால் இருதய நோய்கள் குறைகின்றன.

5. உடல் நலத்தைக் கெடுக்கும் கிருமிகள் வாய், மூக்கு, தொண்டை வழியாக உள்ளே நுழையவிடாமல் இது ஒரு தடுப்பு சுவர் (Coating) போன்று வேலை செய்து தடுக்கின்றது. இதனால் சைனஸ், அடிக்கடி தும்மல், சளி பிடித்தல் தொல்லை உள்ளவர்களுக்கு இது உடனடி நிவாரணத்தை அளிக்கிறது.

மருத்துவ நிபுணர் Dr. J. அமலாதேவி M.D.,D.G.O. அவர்களிடம் இப்பயிற்சியைச் செய்யச்சொல்லி அதன் பலன்களை விளக்குமாறு கேட்டோம். அவர் விளக்குவதைக் காண்போம்.

1. எண்ணெய் கொப்பளிப்பது உமிழ்கின்ற நீர்மத்தில் வாயிலுள்ள கிருமிகள் கேடு விளைவிக்கும் பொருட்கள் முழுமையாக வெளியேற்றப்படுகின்றன.

2. நல்ல பசி, ஆழ்ந்த, அமைதியான உறக்கம், நல்ல மனநிலை ஆகியவை தோன்றுகிறது. தற்காலிக நோய்கள் இரண்டு முதல் நான்கு நாட்களில் நீங்கி விடும். நாட்பட்ட நோய்கள் நீங்க நீண்ட காலமாகலாம். சில சமயம் ஓராண்டுவரை செய்ய வேண்டி வரலாம். ஓராண்டிற்குள் அனைத்துப் பருவங்களிலும் நேரிடும் மாறுதல்கள் காரணமாக ஏற்படும் நோய்கள், ஒவ்வாமை ஆகியவற்றிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கின்றது.

3. எண்ணெய் கொப்பளிப்பதைத் தொடர்ந்து வெளிப்படையாகக் காணப்படும் அறிகுறிகள் முழங்கைகள், முழங்கால்கள், கால் விரல்கள் மீது தோல் நிறம் சிவப்பாகி, மிருதுவாகி பளபளப்படை கின்றது.

4. மேலும் தோலின் மீது குழிகளும், வெடிப்புகளும் மாயமாக மறைந்து தோல் பளபளப்படைகின்றது.

5. கால், கை விரல்கள் மெருகுற்று இரத்த ஓட்டம் பெருகியதற்கான அறிகுறிகள் தெரிகின்றது. இத்தகைய மாறுதல்களை உள்ளுறுப்பு களிலும் ஏற்பட்டு அவையனைத்தும் முழு நலத்துடன் சிறப்பாகச் செயல்படுகின்றன. அதாவது உடலில் இருக்கும் அனைத்துப் பாகங்களிலும் இரத்த ஓட்டம் சீரடைகிறது என்பதை உணர்த்துகிறது.

6. நஞ்சு கலந்த வேதியல் பொருட்கள், வீண்பட்ட பொருள்கள், நோய் உண்டு பண்ணும் நுண் உயிர்கள் உடலை நோய் தொல்லைக்கு ஆளாக்குகின்றன. நுண்ணுயிர்களுக்கும், வெவ்வேறு வகையான பக்டீரியாவிற்கும், வாய்நாற்றங்காளாகப் பணியாற்றுகின்றது. கிருமி களுக்குப் புகலிடமாக மாறிப் பாதுகாப்புத் தருகின்றது. எண்ணெய் கொப்பளிப்பு பயிற்சி அக்கிருமிகளை ஒழித்து நசுக்குகிறது. மியூகஸ்மெம்பரேன் (Mucus membrane) வழியாக உடலில் நஞ்சு கலந்த வேதியல் பொருட்களை வெளியேற்றுகின்றது.

7. எண்ணெய் கொப்பளிக்கும்போது வாயில் தயாராகும் நுரை போன்ற நீர்மத்தை உமிழ்ந்துவிடுவதன் மூலம் மனிதன் உடலை அழிக்கும் நுண் உயிர்களின் செயல்பாட்டினைக் களைகின்றோம்.

8. உடற் செயற்பாடுகள் (Metabolic Routine) செவ்வனே நடக்கின்றது.

9. எண்ணெய் கொப்பளித்தல் பயிற்சி செய்வதன்மூலமாக உடலில் எல்லாப் பாகங்களுக்கும், திசுக்களுக்கும் செல்லும் இரத்த ஓட்டம் சீரமைக்கப்படுகின்றது. உடலில் உள்ள நோய் எதிர்ப்புத்தன்மை அதிகரிக்கப்படுகின்றது.

10. நமது உடலில் அதிகமான எண்ணெய் மற்றும் கொப்புப் பொருட்கள் இரத்த நாளங்களில் சேர்வதன் காரணமாகத் தூய இரத்த ஓட்டம் உடலின் பல்வேறு பாகங்களில் குறைந்து அல்லதுஇயலாது போகின்றது. இதை ஆயில் புல்லிங் சீரமைக்கிறது.

11. இதய நோய்களுக்கு வழிவிடும் Arterio Sclerosis என்னும் கொழுப்பு அடைப்பை ஆயில் புல்லிங்மூலம் குணப்படுத்திவிடலாம். இப்பயிற்சி ரத்த நாளங்களில் பெருகிவிட்ட கொழுப்புக்களை அப்புறப்படுத்து கின்றது. இருதயவலி, Heart attack போன்றவை நிகழாமல் தடுக்கின்றது. இறுக்கமாகுதல், இரத்த ஓட்டத்தில் தடங்கல் முதலானவை குறைந்து மறைகின்றன.

12. இரத்த நாளங்கள் மென்மையாகின்றன. உடலில் உள்ள அனைத்துப் பாகங்களுக்கும் இரத்த ஓட்டம் உயிர்ப்பிக்கப்படுகின்றது.

13. நரம்பு சுருட்டு (வெரிகோஸ் வெயின்ஸ்) முதலிய இரத்த தேக்க நோய்களும் குணமாகிறது.

மேற்கண்ட மருத்துவரின் சான்று உங்களுக்கு மேலும் நம்பிக்கை ஊட்டுகின்றதல்லவா!

தொடர்ந்து உணவுக்குமுன் மூன்று வேளையும் செய்து வாருங்கள் இடையில் சில நாட்கள்விட்டு விட்டாலும் பரவாயில்லை மீண்டும் தொடர்ந்து செய்துவாருங்கள். ஓராண்டிற்குள் அனைத்து நோய்களும் நீங்கும் என்கிறார் டாக்டர் மெத் கராஷ். அத்துடன் புற்று நோய்க்கும் சிறப்பாகப் பய்னபடுத்துகிறது என்கிறார்.

சிலருக்கு இப்பயிற்சி செய்யும்போது நோய் அதிகரிக்கலாம். (Agravation). அதுவே நோய் நீங்குவதற்கான அறிகுறிதான். தொடர்ந்து செய்ய முழுவதும் குணமாகும்.

அமைதியான மனம், ஆழ்ந்த உறக்கம், அளவான பசி, இக்குறிகளே உடல் நலத்தைக் காட்டுவன. அதுவரை தொடர்ந்து

செய்யுங்கள் இதன் பலனை முழுமையாகப் பெறவும். அதைத் தக்க வைத்துக்கொள்ளவும் எளியமுறை உடற்பயிற்சி மற்றும் தியானத்தை மனவளக்கலை மன்றங்களில் கற்றுக் கொண்டு தொடர்ந்து செய்து வாருங்கள்.

உடல் நலமும், மனநலமும் பெற்று வாழ்வில் வெற்றியோடு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்!

## சில அனுபவக் குறிப்புகள்

- நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் இதில் எதை உபயோகிப்பது என்று பல அன்பர்கள் கேட்கிறார்கள். முதலில் நல்லெண்ணெயில் செய்து பாருங்கள், ஒவ்வாமை தோன்றியதெனில் சூரியகாந்தி எண்ணெயை உபயோகியுங்கள்.
- உடல் எடை குறையுமா என்ற கேள்விக்கு நிச்சயமாக மூன்றுவேளையும் மாதம்வரை தொடர்ந்து செய்தவர்களுக்கு ஐந்து கிலோவரை குறைந்துள்ளது. உணவில் அளவுமுறை காத்தல் மற்றும் தொடர்ந்து தீவிரமாகச் செய்தலைப்பொறுத்தே பலன் அமையும்.
- எனக்குக் கழுத்தில் (Adam apple) பகுதியில் பல மருக்கள் இருந்தன. பல ஆண்டுகளாக ஷேவிங் செய்ய தடையாக இருந்த அவை பல மருந்துகளுக்கும் போக்கு காட்டின் எண்ணெய் கொப்பளித்தல் ஒரே மாதத்தில் மறைந்து ஆச்சரியத்தையும் இப்பயிற்சியில் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. சில அன்பர்கள் முகப்பருக்களும் மறைந்ததை கூறினார்.
- எண்ணெய் கொப்பளித்ததால் வாயில் ஏற்படும் சீரான அழுத்த அசைவுகள் இரத்தவோட்டத்தை உடல் முழுவதும் சீராக இயங்க வைக்கிறது. இதனால் வெப்பவோட்டமும், காற்றோட்டமும் சீராகிறது. இம்மூன்றும் உடலில் சரியானால் நோய்க்கு அங்கு என்ன வேலை?

## மங்கல மங்கையருக்கு சில அறிவுரைகள்

1. தினமும் ஸ்நானம் செய்யும் முன் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக் கீழ்க்காணும் மந்திரத்தைச் சொல்லி ஸ்நானம் செய்யுங்கள்.

   *"காங்கேச ஜமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி*
   *நர்மதா சிந்து காவேரி ஜலேஸ்மின் - சன்னிதம் குரு:"*

   கெங்காமுதல் காவேரிவரையுள்ள புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்வதாக மனதில் நினைத்தால் அந்த புனித நதிகளில் ஸ்நானம் செய்த பலன் உண்டாகும்.

2. வீட்டில் ஏதாவது பொருள் தீர்நதுவிட்டால் - "இல்லை" இல்லை என்று சொல்லக்கூடாது. இது வேண்டும் அது வேண்டும் எனக் கூறுங்கள். (உ-ம்) - அரிசி வாங்க வேண்டும். பருப்பு வாங்க வேண்டும்.

3. இரவு வேளையில் வீட்டைப் பெருக்கக்கூடாது. இரவில் வீட்டைப் பெருக்கிக்கூட்ட வேண்டிய அவசியம் வந்தால், பெருக்கிய குப்பைகளை ஒரு புறமாக வைத்துவிட்டு மறுநாள் காலையில் வெளியில் போடுங்கள். இரவில் கூட்டிய குப்பைகளை வெளியில் போடக்கூடாது.

4. தினமும் காலை, மாலை வேளைகளில் வீட்டு வாசலில் மஞ்சள் நீர் தெளித்து மங்கலக் கோலமிடுங்கள், அல்லது சுவாமி அறையில் மங்கல கோலமிடுங்கள். வீட்டில் இடவசதியுள்ளவர்கள் முற்றத்தில் துளசிச்செடியை நாட்டி மஞ்சள் நீர் வார்த்துத் துளசிக்கு முன் கோலமிட்டு வாருங்கள். எவ்வித துன்பங்களும் விலகுவதோடு லக்ஷ்மீ கடாக்ஷம் உண்டாகும்.

5. தினமும் சுவாமி அறையில் விளக்கேற்றுமுன் தீபத்தைச் சுத்தம் செய்து சந்தன, குங்கும திலகமிட்டு அக்ஷதை (அக்ஷதை - மஞ்சள் கலந்த அரிசி) இட்டு மலர்களினால் அலங்கரித்து, பட்டுத்துணி சாத்தி, கீழ்க்காணும் சுலோகத்தைச் சொல்லித் தீபத்தை ஏற்றுங்கள்.

   *"சர்வ மங்கல மாங்கல்யே சிவே சர்வார்த்த ஸாதகே*
   *சரண்யே திரியம்ஹே தேவீ நாராயணீ நமோஸ்துதே"*

   *"சுபம் மங்கல மாங்கல்யே சிவே சர்வார்தத ஸாதகே*
   *சர்வ சத்ரு விநாசாயே தீபஜ்ஜோதி நமஸ்துதே"*

"ஆயுர்தேஹி தனந்தேஹி வித்யாம் தேஹி நமோஸ்துதே
ஸமஸ்த மஹிலாம் தேவி தேஹிமே பரமேஸ்வரி"

எல்லாவிதமான வாழ்வையும், செல்வம் முதலான அஷ்ட ஐஸ்வர்யத்தையும், நுண்ணிய அறிவையும், எல்லாவிதமான சத்ரு (விரோதம்) க்களை போக்கக்கூடியதும் அனைத்துப் பாவங்களை நீக்கி சிஷேசமான வாழ்வைத் தரக்கூடியதும் அனைத்துப் பாவங்களை நீக்கி விஷேசமான வாழ்வைத் தரக்கூடிய ஜ்யோதி வழவான தீப லக்ஷ்மியைப் பிரார்த்தித்து அருள்பெறுவோம்.

வெற்றிலை, பழம், கற்கண்டு, பால் இவற்றில் ஒன்றை வைத்து நெய்வேத்தியம் செய்து சாம்பிராணி, கற்பூர ஆராதனை செய்து வழிபடுங்கள் லக்ஷ்மீகடாக்ஷம் உண்டாகும்.

6. தீபங்களை ஏற்றும்போது ஏகமுகதீபம், அல்லது பஞ்சதீபம் சிறப்பானது.
(ஏகம் - ஒன்று, பஞ்ச - ஐந்து)

7. எள் - எண்ணெய் - (நல்லெண்ணெய்) இலுப்பை எண்ணெய் கலந்த விளக்கு ஏற்றினால் "ரோக நிவாரணம்" நோய் அகலும்.

8. பசுநெய் கொண்டு விளக்கேற்றினால் "தனவிருத்தி" செல்வம் செழிக்கும்.

9. பசுநெய், இலுப்பை எண்ணெய், வேப்ப எண்ணெய், எள்-எண்ணெய், ஆமணக்கு எண்ணெய் ஆகிய ஐந்தையும் சம அளவு கலந்து விளக்கேற்றினால் "சத்ரு ஜெயம்" எதிரிகளை வெல்லலாம்.

10. பசுநெய், இலுப்பை எண்ணெய் சம அளவு கலந்து விளக்கு ஏற்றினால் "ஆயுள் விருத்தி" நீண்டகாலம் சமமாக வாழலாம்.

11. தீபத்தை கிழக்கு முகமாக அல்லது வடக்கு முகமாக ஏற்றி வைப்பது சிறப்பைத் தரும். எவர்சில்வர் விளக்குகள் பூஜை, வழிபாட்டிற்கு ஏற்றதல்ல.

12. ஏற்றி தீபத்தை அணைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் லஷ்மியை மனதில் எண்ணிக்கொண்டு ஒரு பூ எடுத்து ஒற்றி அணைக்க வேண்டும். (வெறுங் கையினாலோ வாயினாலோ ஊதியோ அணைக்கக்கூடாது)

13. சுவாமி அறையில் சுவாமிப்படங்கள் கிழக்குமுகமாக, அல்லது வடக்கு முகமாக வைத்து வழிபட வேண்டும். எந்தக் காரணத்தைக்கொண்டும் "தெற்குப்பக்கமாக" சுவாமிப்படங்கள் வைக்கக்கூடாது.

14. சுவாமி அறையில் தெய்வங்களின் படங்களுடன், அமரத்துவம் அடைந்தவர்களின் படங்களைச் சேர்த்து வைத்து வழிபடுவது கூடாது. (அமரத்துவம் இறந்த பெற்றோர்களின் படங்களைத் தனியாகவே வைத்து விளக்கேற்ற வேண்டும்.

15. சுவாமி அறையில் கிழக்கு, அல்லது வடக்கு முகமாக வைக்கும் படங்களில் முதலில் விநாயகர், நடுவே லஷ்மீ அடுத்த வள்ளி தேவனோ சமேத சுப்பிரமணியர் ஆகிய மூன்று படங்களும் அவசியம்.

16. வீடுகளில் உட்கார்ந்த பாவனையிலுள்ள சுவாமிப்படங்களே வழிபடுவது உத்தமம்.

17. மாதவிலக்கான காலங்களில் வீட்டின் புனிதத்துவத்தைப் பேணுதல் அவசியம். வீட்டின் பிரதான வாசல் வழியை உபயோகிக்காமல் வீடின் மற்றைய வாசல்களை உபயோகிக்கவும்.

18. வீட்டிலும் சரி வெளியிடங்களிலும் சரி தலைமுடியை விரித்த வண்ணம் நிற்காமல் உங்களை நீங்கள் பாதுகாக்கவும். பஞ்சாங்க நமஸ்காரம் செய்யும்போது நிலத்தில் படாதிருத்தல் வேண்டும்.

19. ஆலயங்களில் உங்கள் தலைமுடி படாமல் பார்த்துக்கொள்ளவும்.

20. சாறியின் முந்தானை காலின் கணக்காலுக்கு மேல் உயரமாகவும் நிலத்தில் படாமலும் முந்தானையை கவனித்துக்கொள்ளவும்.

21. சந்தனம், குங்குமம் ஆகியவற்றை நெற்றியில் பொட்டு வைக்கும் பொழுது மோதிர விரல் சமூகம் பொட்டு வைக்கவும். மற்ற விரல்கள் மனநிலையில் தீங்குகளை விளைவிக்கும்.

22. ஆலயங்களுக்குச் செல்லும்போது ஆடம்பரமான டாம்பீகமான ஆடைகள் விலை உயர்ந்த சாறிகள் அதிகமான பளபளப்பானவை ஆகிய வற்றை அணியாமல் எளிமையாக செல்வதால் மற்றவர்களின் மனங்கள் வேதனைப்படாமல் இருக்கும்.

23. பேசும் வார்த்தைகளில் இனிமை இருக்கவேண்டும். முகத்தில் கடுகடுப்பு இல்லாமல் முகத்தில் மலர்ச்சியுடன் இருக்க முயற்சிக்கவும். இதனால் உங்கள் குடும்பம் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

# தியானத்தின்மூலம் நோயைக் குணப்படுத்த முடியுமா?

முடியும். அற்புதங்கள் மூலம் சிலர் நோய்களைக் குணப்படுத்து கின்றனர். ஆனால் அற்புதங்களால் குணப்படுத்துவது என்பது பகுத்தறிவுக்கு ஒவ்வாததே என பகுத்தறிவாதிகள் சிலர் சொல்கின்றனர். மாத்திரைகளின்றி வெறும் சஙங்கல்பத்தினாலேயே மனிதன் தன்னுடைய நோய்களையும், பிறருடைய நோய்களையும் குணப்படுத்த முடியும் என்பதை ஆன்மீக வழியில் ஆராய்வோம்.

இப்பிரபஞ்சத்தில் இயற்கை மனிதனுக்குப் பல நிபுணர்களை வழங்கிருக்கிறது என்பது அறிவியல் நிபுணர்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. மனிதனுக்கு மட்டுமல்ல புல், பூண்டு, பூக்கள் முதல் அனைத்துப் படைப்புக்களிலும் பற்பல ஆற்றல்களை இயற்கை கொடுத்திருக்கிறது. நாம் வாழும் இந்த உலகத்தில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை கொ்ண்ட உயிரினங்கள் வாழ்கின்றன என்பதை நாம் அறிவோம்.

மனிதனின் நோய்களைக் குணப்படுத்தும் தாவரங்கள் அனைத்தும் ஓரறிவு வகையைச் சார்ந்தவை. ஓரறிவு இனமான ஒவ்வொரு தாவரமும் ஒவ்வொரு ஆற்றலைப் பெற்றிருக்கின்றது. மனிதன் கூரிய அறிவுள்ளவனாதலால் ஒரே மாதிரி குணப்படுத்தும், ஒத்த பண்புகளை யுடைய தாவரங்களையெல்லாம் வகைப்படுத்தி, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பெயரிட்டான்.

நாம் உண்ணக்கூடிய அத்தனை பழங்களிலும், தாவரங்களிலும் பற்பல, ஆற்றல்கள் இருக்கின்றன என்பதையும், அவற்றை உட்கொண்டால் மனிதனுடைய பல நோய்கள் குணமாவதையும் ஆங்கில மருத்துவர்களே ஒப்புக்கொண்டுள்ளனர்.

சாதாரண நிலையில் ஓர் அறிவை மட்டுமே பெற்றிருக்கிற புல், பூண்டு, இலை, தழைகளுக்கு மனிதனுடைய பல கொடிய நோய்களைத் தீர்க்கக்கூடிய சக்தி இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளும் நாம், ஆறறிவு பெற்ற மனிதன் மட்டும் தொடுதலின் மூலம் நோய்களைக் குணப்படுத்த முடியும். என்பதை ஒப்புக்கொள்ள ஏன் மறுக்க வேண்டும்?

ஓரறிவு படைத்த தாவரம் ஒருவித முறையில் ஆற்றலைப் பெறுகின்றதென்றால் ஆறறிவு படைத்த மனிதன் தன்னுடைய ஆறாவது அறிவாகிய மனதைக் கொண்டு ஆற்றலைப் பெறமுடியும் என்பதை நம்முடைய சித்தர்கள் பண்டைக்காலத்திலேயே உணர்த்தியுள்ளனர். தியானகத்தின மூலம் மனத்தை ஒடுக்கி பிரபஞ்சத்திலிருந்து தங்களுக்கு வேண்டிய ஆற்றலைப் பெற்று பற்பல நோய்களைக் குணமாக்கியுள்ளனர். தியானத்தின் மூலம் எவ்வாறு அந்த சக்திகளைப் பெறுவது என்பதையும் சொல்லிச் சென்றுள்ளனர். ஆனால், நாம் நாகரீகத்தின் மேலுள்ள மோகத்தால் அவற்றை மறந்துவிட்டு "பகுத்தறிவு" என்று திசை மாறுகிறோம்.

பிரபஞ்சத்தில் எல்லா நோய்களையும் குணப்படுத்தக்கூடிய சக்திகள் அணுவடிவத்தில் பரவிக் கிடக்கின்றன. எப்படி வெட்டவெளியில் பல தொலைக்காட்சிகளின் நிகழ்ச்சிகள், ஒலி, ஒளி அலைகளின் வடிவில் பரவி நிரவிக் கிடக்கின்றனவோ அதுபோலவே பற்பல ஆற்றல்கள், சூட்சுமங்கள் பரவிக் கிடக்கின்றன. எப்படி கேபிள் தொடர்புமூலம் தொலைக்காட்சிப்பெட்டியில் நமக்கு வேண்டிய சேனலைப் பெற்றுக் கொள்கிறோமோ அதுபோல் தியானத்தின்மூலம் பிரபஞ்சத்தில் மறைந் துள்ள சக்தியைப் பெற்று, தாவரங்கள் நோய்களைக் குணப்படுத்து வதைப்போல நாமும் குணப்படுத்திக்கொள்ளலாம்.

மகான்கள், சித்தர்கள் சிலர் தியானத்தின்மூலம் பிரபஞ்சத்தி லிருந்து தங்களுக்கு வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு, அவற்றின் மூலம் தம்மை நாடி வரும் அன்பர்களது நோய்களைக் குணப்படுத்து கிறார்கள்.

பிரபஞ்சத்தில் நிலைக்கும் ஆழ்ந்த தியானத்தை ஒருவர் முறையாகக் கற்றுக்கொண்டு தங்களுடைய நோய்களைத் தாங்களே போக்கிக் கொள்ளலாம். மற்றவர்களது நோய்களையும் போக்கலாம். இதற்காகத்தான் இறைவன் பிரபஞ்சத்தில் எண்ணற்ற சக்திகளை உலவவிட்டு, அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள ஆறாவது அறிவை மனித இனத்திற்கு மட்டும் கொடுத்துள்ளார். எனவே ஒருவர் ஆன்மீகத்தின் மூலம் தியானத்தைக் கற்றுக்கொண்டால், பிரபல மருத்துவர்களினால் தீர்க்க முடியாத நோய்களைக்கூட இறைவன் கருணையால் போக்கிக் கொள்ளலாம் என்பது நிச்சயம்.

**கோவிலுக்குச் செல்லும் முன் கடைப்பிடிக்க வேண்டியவை என்ன?**

குளித்து உடல் சுத்தத்தோடு கோவிலுக்குச் செல்ல வேண்டும். சுத்தமுள்ள, எளிமையான உடை அணியலாம். கவர்ச்சிமிக்கதும் விலை உயர்ந்ததுமான ஆடைகளையும், ஆபரணங்களையும் தவிர்க்கலாம். செயற்கை அழகுப் பொருட்களையும் பிளாஸ்டிக் பொருட்களையும் அணியக்கூடாது.

கோவிலுக்குச் செல்வதற்குமுன் வீட்டில் வழிபடும் தெய்வங்களை வணங்கவும்.

வீட்டிலுள்ள முதியவர்களின் அனுமதியையும் பெறவேண்டும்.

போகிற கோவிலின் முக்கிய மூர்த்தியை மனத்தில் நினைத்துக் கொள்ளுங்கள்.

வெறும் கையுடன் கோவிலுக்குச் செல்லவேண்டாம். எண்ணெய்யோ, கற்பூரமோ, ஊதுவத்தியோ, பூவோ வாங்கிச் செல்லுங்கள்.

கோவிலுக்குச் செல்லும்போது வழியில் சந்திக்கின்ற உறவினரையோ, நண்பரையோ நலம் விசாரிப்பதோ நின்று மற்ற விஷயங்கள் பற்றிப் பேசுவதையோ முடிந்தவரை தவிர்க்கவும்.

வழிபாட்டுக்குச் செல்கையில் வழிபடுவோரின் சூட்சும உடலினுள் நிலவும் குண்டலினி சக்தி மேலே வரத் தொடங்கும்.

கோவிலுக்குள் புகுந்தவுடன் அதன் சுற்றுச் சுவர்களிலும் பிரகாரங்களிலும் தேங்கி இருக்கும் காதுக்குக் கேட்காத அருள் ஒலியினைக் கேட்க முயற்சி செய்யுங்கள்.

கோவிலுக்குள் பூரண அமைதி நிலவுமாறு கோவிலை நிர்வகிப்போர் கவனித்துக்கொள்ள வேண்டும்.

தீப ஸ்தம்பத்துக்குமுன் நின்றுகொண்டு கோவிலின் மூலவரைப் பார்த்து வணங்க வேண்டும். பிறகு பிரதட்சிணம் வரவேண்டும்.

கோவில் பிரகாரத்தைச் சுற்றிலும் உள்ள சிறு தெய்வங்களையும் வணங்கிச் சுற்றி வரவேண்டும்.

உண்டியலில் முடிந்தளவு காணிக்கை போடுங்கள்.

பிரகாரத்தைச் சுற்றிவந்த பின் உள் பிரகாரத்தைச் சுற்றி வந்து மூலவரை மீண்டும் வணங்கிப் புறப்படவும்.

விநாயகருக்கு ஒரு பிரதட்சணமும், சிவனுக்கும், தெய்வாம்சமுள்ள மூர்த்திகளுக்கும் மூன்று பிரதட்சணமும், விஷ்ணுவுக்கும் தேவிக்கும் நான்கு பிரதட்சணமும் செய்ய வேண்டும். சுற்றி வரும்போது பலி கற்களுக்கு வெளியில் சுற்றவும்.

**தீபாராதனை பற்றிய விளக்கம் கிடைக்குமா?**

இறைவனுக்குச் செய்யப்படும் பதினாறு வகை உபசாரங்களில் ஒன்று தீபாராதனை. தீபாராதனைக் காலத்தில் தெய்வங்கள் பலரும் தீபங்களில் அமர்ந்து இறைவனைத் தரிசித்துச் செல்வதாக ஐதீகம்.

தீப வழிபாட்டில் பலவகை தீப வரிசைகள் காட்டப்படுகின்றன.

நட்சத்திர தீபம் காட்டப்படும்போது நட்சத்திரங்கள் இறைவனை வழிபட்டு ஒளிபெறுகின்றன. ஒன்பது தீபங்கள் நவசக்திகளைக் குறிக்கும். ஏழு தீபங்கள் சப்த மாதர்களைக் குறிக்கும். பஞ்ச தீபங்கள் நிவர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தி அதீதகலை என்ற ஐந்து நிலைகளைக் குறிக்கும். மூன்று தீபம் சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்று ஒளிகளையும், ஒற்றை தீபம் சரஸ்வதியையும் குறிப்பதாகச் சொல்வர். தீபாராதனை நடக்கும்பொழுது இறுதியாக கும்ப தீபம் காண்பிக்கப்பெற்றும் கும்பதீபம், சதாசிவ தத்துவத்தைக் குறிக்கும்.

தீபாராதனை செய்யும்பொழுது மூன்றுமுறை காட்டுவார்கள். முதன்முறை உலக நலத்திற்காகவும், இரண்டாம் முறை ஊரில் உள்ள மக்கள் நல்வாழ்விற்காகவும், மூன்றாம்முறை ஐம்பெரும் பூதங்களால் இடையூறின்றி நல்லது நடக்க வேண்டும் என்பதற்காகவும் மும்முறை தீபம் காட்டுவர்.

**வீட்டில் கடவுளைப் பூஜிப்பதற்கும், கோயிலுக்குச் சென்று வழிபடுவதற்கும் என்ன வித்தியாசம்? ஆலயத்தில் வழிபடுவதால் நமக்குக் கிடைக்கும் சிறப்பான பலன் என்ன?**

பாலில் நெய் மறைந்திருப்பதைப் போல எல்லா இடங்களிலும் இறைவன் நிறைந்து மறைந்திருக்கிறான். கடைந்த தயிரில் வெண்ணெய் திரண்டு வருவதைப்போல, ஞானிகள் உள்ளத்திலும் திருக்கோயிலிலும் இறைவன் விளங்கி, காட்சி அளிக்கிறான்.

மற்ற இடங்களில் இறைவனை நினைத்து தியானிப்பதனாலும், துதிப்பதனாலும், வழிபடுவதனாலும் வினைகள் வெதும்புகின்றன. கோயிலில் இறைவனை வழிபட்டால், வினைகள் வெந்து, எரிந்து, கருகி, நீறாகி விடுகின்றன. கொடிய வெயிலில் ஒரு துணியை வைத்தால் அத்துணி காயுமேயன்றி கருகிச் சாம்பலாகாது. ஒரு குவி ஆடியை வெயிலில் வைத்து, அதன் கீழே குவிந்து வரும் சூரியக் கதிரில் துணியை வைத்தால், அது கருகிச் சாம்பலாகிவிடுகிறது. நேர் வெயிலுக்கு இல்லாத ஆற்றல், குவி ஆடியின் கீழேவரும் வெயிலுக்கு உண்டு.

பரந்து விரிந்திருக்கின்ற கதிரவனுடைய கதிர்களின் வெப்பத்தை ஒன்றுபடுத்தி, தன் கீழெ உள்ள இடத்திற்கு குவிஆடி பாச்சுகிறது. பிற இடங்களில் இறைவனை வழிபடுவது வெயிலில் துணியைக் காய வைப்பது போலாகும். திருக்கோயிலில் இறைவனை வழிபடுவது நமது பாவங்களை எரிக்க, குவிஆடி வைப்பதுபோலாகும். ஆகையால் மற்ற எல்லா இடங்களில் வழிபட்டாலும் திருக்கோயிலில் இறைவனை வழிபாடு செய்வது இன்றியமை யாததாகும்.

நமது திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்கள் தேவர்களா லும், முனிவர்களாலும், சமயக் குரவர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகிய ஆன்றோர்களாலும் நிறுவப்பட்டு துதிக்கப்பட்ட காரணத்தால் மேன்மைபெற்று, வழிபடுவோருடைய வல்வினைகளை அகற்றி வரங்களை அளிக்கின்றன. எனவே, ஆலயத்திற்குச் சென்று வழபடுவது அதிக நலன்களைப் பயக்கும்.

# விரத நாட்கள் - பலன்கள்

1) ஒவ்வொரு மாதத்திலும் மும்மூன்று தினங்களாக பன்னிரெண்டு வருடம் உபவாசம் இருப்பவன் எதிரி இல்லாமலும், மனத்துயரம் இல்லாமலும் ஒரு பெரிய கூட்டத்தின் தலைவனாய் இருப்பான்.

2) தினமும் காலையிலும் மாலையிலும் மட்டும் உணவருந்தி இடையில் நீர் எதுவும் அருந்தாமல், எப்போதும் அகிம்சையைக் கடைப்பிடிப்பவன் ஆறு வருடங்களில் பயன் பெறுவான் என்பதில் சந்தேகமில்லை. அந்த மனிதன் புண்ணியவானாகி, ஆயிரக்கணக் கான பெண்கள் சூழ்ந்த ஆடல், பாடல்கள் முழங்குகின்ற அழகு தேவதைகளின் லோகத்தில் உல்லாசமாய் இருப்பான்.

3) ஒரு வருடம் முழுவதும் தினந்தோறும் ஒரு வேளை மட்டும் உணவருந்தி உபவாசம் இருப்பவன் அதிராத்ரம் என்னும் யாகத்தின் பலனை அடைவான். அவன் 30, 000 வருஷ காலம் சுவர்க்க லோகத்தில் கொண்டாடப்படுவான். அது முடிந்த பின் இவ்வுலகத் திற்கு வந்து சிறந்த பெருமையை அடைவான்.

4) நோயும் களைப்பும் இல்லாமல் உபவாசம் செய்பவன் ஒவ்வோர் உபவாசத்திலும் யாக பலனை அடைவது திண்ணம்.

5) உபவாசமானது சக்தியில்லாதவனுக்கு சக்தி கொடுப்பதாகவும், புண்பட்டவனுக்கு புண் ஆற்றுவதாகவும், நோயுள்ளவனுக்கு மருந்து களின் வகைகளாகவும், கோபித்தவனுக்குக் கோபத்தைத் தெரிவிப்ப தாகவும், வறுமையினால் கஷ்டப்படுகிறவனுக்குத் திரவியங்களைக் கொடுப்பதாகவும் காணப்படுகிறது.

ஆனால், செல்வங்களில் சுகமாக வளர்ந்தவர்களுக்கு இது பிடிக்காது. உபவாசமிருக்கும் மனிதனோ, நோயற்றவனாகவும், நினைத்தது கைகூடி வந்தவனாகவும், பாவம் நீங்கியவனாகவும், தேகம் விட்டபின் பரிசுத்தனாகி அலங்காரங்கள் செய்துகொண்டு, நினைத்தபடி செல்வதும், பொன்னிறமாக விளங்குவதுமான விமானத்தில் ஏறி எல்லா உலகங்களிலும் சஞ்சரித்துக்கொண்டு உபவாசத்தின் பலனை அனுபவிப்பான். அவன் தேகத்திலுள்ள மயிர்க்கால்கள் எத்தனையோ அத்தனை ஆயிரம் வருடங்கள் அவன் சொர்க்கத்தில் மகிழ்ந்திருப்பான்.

## குருபகவானுக்கு மஞ்சள் ஆடை உடுத்துவது ஏன்?

மஞ்சள் மங்களகரமான பொருள். சுப காரியங்களுக்கும் மஞ்சள்நீர் பயன்படுத்தப்படுகிறது. விஞ்ஞான ரீதியாக மஞ்சள் சிறந்த கிருமி நாசினியாகும். மஞ்சளுக்குத் தைரியத்தைக் கொடுக்கும் சக்தி உண்டு. குரு பகவான் கல்விக்கு அதிபதி. கற்கின்ற கல்வி மனோ தைரியத்தை வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே அவருக்கு மஞ்சள் ஆடை தரப்பட்டுள்ளது. மஞ்சளுக்குத் தீய சக்திகளை விரட்டும் தன்மை உண்டு. பாலில் மஞ்சள்பொடி சேர்த்துக் குடித்தால் குழந்தைகளுக்கு அறிவுத்திறன் வளரும். சுறுசுறுப்பு உண்டாகும். வீட்டில் தினமும் மஞ்சள் நீர் தெளித்தால் இலட்சுமி கடாட்சம் ஏற்படும். பெண்கள் சௌபாக்கியவதியாக இருப்பார்கள். மேலும் மஞ்சளுக்கு உடலுக்குக் குளிர்ச்சி தரும் தன்மை உண்டு.

நரம்பு சம்பந்தமான நோய்களுக்கு மஞ்சளைப் பயன்படுத்து கிறார்கள். மஞ்சள் சேர்த்துச் சாப்பிட்டால் உணவு சீக்கிரம் ஜீரணம் ஆகும். அத்துடன் ஜீரண உறுப்புகளும் பலம் பெறும். மஞ்சள் ஆடையைத் தானம் செய்தால் கல்வி அபிவிருத்தி ஏற்படும்.

ஒரு குழந்தையிடம் "உனக்கு என்ன நிறம் பிடிக்கும்" எனக் கேட்டு அந்தக் குழந்தை "மஞ்சள்" என பதில் சொன்னால் எதிர்காலத்தில் அக்குழந்தை சிறந்த கல்வியாளராக வரும் என எதிர்பார்க்கலாம். விஞ்ஞானிகளில் பலருக்கு மஞ்சள் நிறமே பிடிக்கும். இவர்கள் எதையும் தோண்டித் துருவி ஆய்வு செய்யும் குணம் உள்ளவர்களாக இருப்பார்கள். குரு பகவானுக்குப் பிடித்தமான உலோகம் தங்கம். இந்த தங்கமும் மஞ்சள் நிறம்தான்.

**நாகதோஷத்திற்குப் பரிகாரமாக சுலோகம், பூஜை செய்வது எப்படி?**

நாகதோஷம் இருந்தால் நாக பிரதிஷ்டை என்று ஒரு வைதீக காரியம் உள்ளது. ஒரு கருங்கல்லில் இரண்டு சர்ப்பங்களைச் செதுக்கி அதற்கு வைதீக முறைப்படி ஸமஸ்காரங்கள் செய்து அரச மரத்தடியிலேயோ, சிவன் கோவிலிலோ பிரதிஷ்டை செய்ய வேண்டும். அப்போது கூறப்படும் ஸ்லோகங்களை எழுதி வைத்துக்கொண்டு அன்றாடம் சொல்வது நல்லது.

நமது இந்து மதத்தில் மட்டுமே மறு பிறவித் தத்துவம் வலியுறுத்தப்படுகிறது. பிற மதங்களில் இது இல்லையா?

மறு பிறவி என்பது எல்லா மதங்களிலுமே இருக்கிறது. இறந்த பிறகு ஜீவன் எங்கேயோமேலே சொர்க்கத்துக்குப் போகிறது என்றால் அதுவே ஜீவனுக்கு முடிவில்லை என்பதை ஒப்புக்கொள்வதற்காகத் தானே அர்த்தம். சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போவதனால்

அதற்குரிய கர்ம பலன்களை எடுத்துக் கொடுத்தானே போகவேண்டும்.!

சிலர் "இங்கே இது ஒரு பிறவிதான" என்று சொல்கிறார்கள். அதன்பின் அவன் எங்கே இருக்க முடியும்? அவன் செய்த கர்மாவில் தானே இருக்கிறான்! கர்மாக்கள் இருக்கும் போது அதன் பலனை அனுபவிக்க அவன் ஏன் திரும்பிவரக்கூடாது?

ஒரு விஷயம், நம்முடைய அனுபவத்தில் தெரிந்துகொள்வது. எத்தனை பிரயத்தனம் செய்தாலும் சில சமயம் காரியசித்தி கிடைப்பதில்லை. சில சமயம் பிராயத்தனம் இல்லாமலேயெ பெரிய காரியங்கள் கைகூடிவிடுகிறது. இதைத்தான் அதிர்ஷடம் என்கின்றோம். இது முந்தைய பிறவியின் பலன்தானே! முந்தைய பிறவியைப்போல மறு பிறவியும் உண்டு என்று ஏன் ஒத்துக்கொள்ள முடியாது.

மறு ஜன்மா இல்லை என்றால் முன் ஜன்மா கிடையாது. நம் முடைய காரியங்களுக்குப் பொறுப்பாளி ஆண்டவனா? நன்மைகளைப் பெற ஆண்டவன் நமக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக் காரணம் நமக்கு நன்மைகளைப்பெற அருகதை இல்லை என்பதாலா? நம்முடைய பழைய வினைகளை முன்பு செய்த காரியங்களின் பலன், இந்த ஜன்மாவில் செய்யும் கர்மா அடுத்த ஜன்மத்தில் பலன் அளிக்கும். ஆகவே நாம் செய்யும் காரியங்களுக்கு நாமே பொறுப்பாளி என்று உணர்வதே நேர்மை.

சிலர் "இங்கே இது ஒரு பிறவிதான" என்று சொல்கிறார்கள். அதன்பின் அவன் எங்கே இருக்கமுடியும்? அவன் செய்த கர்மாவில் தானே இருக்கிறான்! கர்மாக்கள் இருக்கும்போது அதன் பலனை அனுபவிக்க அவன் ஏன் திரும்பிவரக்கூடாது?

ஒரு விஷயம், நம்முடைய அனுபவத்தில் தெரிந்துகொள்வது. எத்தனை பிரயத்தனம், செய்தாலும் சில சமயம் காரியசித்தி கிடைப்பதில்லை. சில சமயம் பிரயத்தனம் இல்லாமலேயே பெரிய காரியங்கள் கை கூடிவிடுகிறது. இதைத்தான் அதிர்ஷ்டம் என்கிறோம். இது முந்தைய பிறவியின் பலன்தானே! முந்தைய பிறவியைப்போல மறு பிறவியும் உண்டு என்று ஏன் ஒத்துக்கொள்ள முடியாது.

மறு ஜன்மா இல்லை என்றால் முன் ஜன்மா முன் ஜன்மா கிடையாது. நம்முடைய காரியங்களுக்குப் பொறுப்பாளி ஆண்டவனா? நன்மைகளைப்பெற ஆண்டவன் நமக்குக்கஷ்டத்தைக் கொடுக்கக் காரணம் நமக்கு நன்மைகளைப் பெற அருகதை இல்லை என்பதாலா? நம்முடைய பழைய வினைகளை முன்பு செய்த காரியங்களின் பலன், இந்த ஜன்மாவில் செய்யும் கர்மா அடுத்த ஜன்மத்தில் பலன் அளிக்கும். ஆகவே நாம் செய்யும் காரியங்களுக்கு நாமே பொறுப்பாளி என்று உணர்வதே நேர்மை.

**தற்பர் என அன்புடன் அனைவராலும் அழைக்கப்படும்
அப்பாத்துரை தற்பரானந்தன் – சமாதான நீதிமான்
தமக்கென வாழாப் பிறர்க்குரியாளன்**



சங்கானைக் கல்விக்கோட்டத்தில் 1993ஆம் ஆண்டு பதில் பணிப்பாளராக அமரர் தற்பரானந்தன் அவர்கள், அதே கோட்டத்தில் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய திரு.ப. விக்னேஸ்வரன் அவர்கள் (தற்போதைய பிரதிச் செயலாளர், வடமாகாண கல்வி அமைச்சு) இருவரும் இணைந்து முதன்முறை யாக 1996ஆம் ஆண்டு சைவத் திருமுறை விழாவை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர். முப்பத்தொரு (31) பாடசாலைகள் இணைக்கப்பட்ட சங்கானைக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சைவப்பெரியார்கள் ஆகியோரின் அனுசரணையுடன் இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வு பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சைவத்தமிழ்ப் பண்பாடு, கலை, கலாசாரம் ஆகியவற்றை வளர்ப்பதிலும், அவர்களுடைய உள்ளார்ந்த திறன்களை மேம்பாடு அடையச் செய்யவும் வழிகோலப்பட்டது. இதன் ஒரு அங்கமாக தமிழ்த்தினப்போட்டி, திருமுறை ஓதுதல், புராணபடனம், கோலம் போடுதல், மாலை, தோரணம் கட்டுதல் ஆகியவற்றில் மாணவர்களை ஈடுபட வைத்து பயிற்சிகள் பாடசாலைகள் தோறும் அளிக்கப்பட்டு- மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி மிகவும் சிறப்பான முறையில் நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்தும் அரங்கேற்றப் பட்டது. இற்றைக்குப் பதினாறு ஆண்டு (16) காலமாக இவ்வகையான நிகழ்வுகளை வருடந்தோறும் நிகழ்த்திவருவது தனிச்சிறப்பம்சமாகும். பாடசாலை மாணவ, மாணவர்களிடையே தமது கலாசாரத்துக்கு ஏற்றவாறு மாணவிகள் பாவாடை சட்டையும், மாணவர்கள் வேட்டி சால்வையும் அணிந்து, நெற்றி நிறைய விபூதி அணிந்து கழுத்தில் உருத் திராக்க மாலைகள் அணிவித்து மாணவர்களின் தமிழ் கலாசாரத்தை வெளிக்கொணர வைத்தமை அமரர் தற்பரானந்தத்தையே சாரும். இந்நிகழ்வு நடைபெறும் காலங்களில் பாடசாலைகள், கோட்ட அலுவல கங்கள், வீதிகள் அனைத்தும் மாலைகளினாலும், தோரணங்களி னாலும் அலங்கரிக்கப்பட்டு பெருவிழாவாக காட்சியளிக்கும்.

நல்லாசிரியனாக, பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் தமிழின் வளர்ச்சிக்காகவும் சைவத்தின் வளர்ச்சிக்காகவும் பாடசாலை மட்டத்திலும், சமூக மட்டத்திலும் ஆற்றிய பணிகள் கல்விச் சமூகத்தினாலும், அனைவராலும் நினைவுகூரப்பட்டு வருவது தனிச் சிறப்பம்சமாகும்.

அமரர் ஆற்றிய அரும்பெரும் பணிகளை தன்னலங்கருதாத சேவைமனப்பாண்புகளை மேற்கண்டவாறு பட்டியலிட்டுப் பார்ப்பது மிகவும் சிறப்பானதாகும்.

1) தலைசிறந்த கல்வியாளரும், சமூக சேவையாளராக விளங்கியவர்.

2) மனித நோக்கங்களையும் விழுமியங்களையும் கட்டிக்காக்க உழைத்த பெருவள்ளல்.

3) தமிழர் பண்பாடு, கலை, கலாசார விழுமியங்கள் மிகவும் சிறப்பான முறையில் மாணவர்களிடையே, சமூகத்திடையே வளர்க்க அரும்பாடு பட்டவர்.

4) கடமையே கண்ணாகக் கொண்டு செயற்பட்டதோடு மனிதநேயப் பண்புகளையும் தமதாக்கிக்கொண்டு உழைத்த பெருமகன்.

5) இவரது செயற்திட்டங்கள் அனைத்தும் பழமைக்குப் பழைமையும் புதுமைக்குப் புதுமையாக அமைந்து மாணவர்களின் வளர்ச்சியும் சமூக நலன்களிலும் வழிகாட்டியாக இருந்தது தனிச்சிறப்பம்சமாகும்.

6) சுருங்கக் கூறின் அளப்பரிய சேவைகளால் அனைத்து உள்ளங்களிலும் ஒரு தனியிடத்தைப் பெற்று செயற்பட்டவர்.

7) மக்களுக்கும், கல்விச் சமூகத்துக்கும் அமரர் ஆற்றிய மகத்தான சேவை, அவர் இறந்தாலும் அவரது புகழ் இம்மண்ணில் பரந்துபட்டு விரிந்து சென்று பயன்தந்து கொண்டேயிருக்கிறது. அமரரது மேலாண்மையை பறைசாற்றி நிற்கின்றது.

8) கலைக்களஞ்சியமாக விளங்கிய அமரர் தற்பரன் அவர்களும் இறந்தும், இறவா புகழுடையார் கல்விச்சமூகத்திடையே உரம்பெற்று நிற்பது கண்கூடு.

9) இந்தவகையில் அமரர் தற்பரானந்தன் "தமக்கென வாழாப் பிறர்க்குரியவன்" என்ற பெருமையை அவரது வரலாறு என்றும் பறைசாற்றி நிற்கும்.

வாழ்க சமூகப்பணி, வளர்க மனிதநேயம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**– விழாக்குழு**

# ஆலயங்கள் சமூகத்திற்கு தரும் வளங்கள்

அன்பிற்கு உறைவிடமாய் அன்பின் வடிவமாக விளங்கும் அமைவிடங்கள் ஆலயங்கள். சிவன் என்ற சொல்லின் அடிநாதமாக விளங்குவது அன்பு. ஆகவே சிவன் உறையும் ஆலயங்கள் யாவும் அன்புக் களஞ்சியங்களாகவே அமையும். (இங்கு சிவன் என்ற சொல் சிவனை அன்றி சிவ அம்சங்கள் கொண்ட அனைத்து இறை ஆலயங்களுக்கும் பொருந்தும்). எனவே ஆண்டவனின் ஆராதனை என்பது அன்பைக் கொடுப்பதும் அன்பைப் பெறுவதுமாகிய இடமெனில் அது சாலப் பொருந்தும். நாம் அங்கு இறைவன்மீது அன்பு செலுத்தப் பழகிக்கொள்கின்றோம். அங்கு செல்லும் எமக்கும் இறைவனுடைய அன்பு கிட்டுகின்றது. இதனால் ஆலயம் இருக்கும் ஓர் சமூகச்சூழல் அன்பு என்ற உணர்வின் உண்மைப்பொருளை உணரவும் அதனை ஒருவர் மீது செலுத்தவும் அதேவேளை ஒருவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளவுமான பயிற்சியினை இலகுவாகப் பெற்றுக்கொள் கின்றது. இறைவன்மீது அன்பு செலுத்துவது மட்டுமன்றி இறைவனை வணங்கும் அத்தனை அடியார்களும் நம்மிடையேயும் அவ்வன்பை வரையாது வழங்கவேண்டும் என்ற வாழ்வியல் வளர்ச்சியை செயற்படுத்திக் காட்டும் இடம் ஆலயமாகும். எனவே ஒரு சமூகத்திற்கான அன்புணர்வுப் பயிற்சி ஆலயம் ஒன்றினால் ஆக்கித்தரப்படுகின்றது என்பதை எவரும் ஏற்றுக்கொள்ளு வர். "அன்பர் மனத்தகத்தான்" இறைவன் என்ற திருமுறை வாக்கியம் இதனை உறுதிப்படுத்தும்.

உணர்வின் அடிப்படையில் உருவாவது சொல். ஆலயங்கள் இறைவனைப் பாடிப் பணிகின்ற அன்பு உணர்வின் சொற்களஞ்சிய மாக விளங்குகின்றன என்பர் பெரியோர். ஆகவே ஆலயங்களே நேரிடையாகவோ மறைமுகமாகவோ தான் இருக்கின்ற பரப்பில் உள்ள அன்பர்களின் பூமாலைகளையும் பாமாலைகளையும் ஏற்றுக்கொள்கின்ற புண்ணிய இடங்கள் எனலாம். இவ்வகையில் பார்க்கும்போது அங்கு வாழும் மக்களின் கலை இலக்கிய விழுமியங்களில் ஆலயம் தன் முத்திரையைச் செலுக்கின்றது. இதனாலே அன்றும் இன்றும் எமது இந்து தமிழ் கலாசாரத்தில் வேறெந்த மொழியிலும் காணப்படாத பக்திப் பாடல்கள் - காவியங்களாக, பிரபந்தங்களாக பல வடிவங்களில் தோற்றம் பெற்றுள்ளன. எனவே மக்கள் கூட்டத்தின் மொழி வளர்ச்சியிலும் எழுச்சி யிலும் ஆலயமும் அங்கு மூர்த்திகரித்திருக்கின்ற இறைவனும்

அவனுடைய அருட்செயல்களும் அடி அத்திவாரமாக அமைந்து ஆக்கம் தருகின்றன. ஆக்கி அழித்து அருளும் நீக்கமற நின்ற தலைவன் என்ற வாக்கியம் இவ்விழுமியத்தை வலியுறுத்தும். இதனால் சொல்லாட்சி என்ற விளைநிலத்தில் உருவாகும் பல்வெறு கலை இலக்கிய நாடக நடன வடிவங்களின் தொற்றம் ஆலயம் ஒன்றின் அமைவினால் சமூகம் ஒன்றில் தோற்றம்பெறுகின்றது. மதுரையம்பதியின் மாண்புமிகு கலாசார அரசியல் வளர்ச்சி இதற்கு சான்றுபகரும். மதுரைக் கோயிலும் பாண்டிய அரசின் எழுச்சியும் இதனை எமக்கு நன்கு விளக்கும்.

சொல்லால் வடிவம் பெறுவது செயல். உணர்வின் வெளிப்பாடா கிய சொல்லும், சொல்லின் வடிவமாகிய செயலும் ஒரு சமூகத்தில் பல்வேறு அகப்புறச் செயல்களுக்கு வித்தாக அமைகின்றது. பலவகைப் பட்ட பணிகளால் உருவானது ஆலயம். அதேவேளை பல்வேறு பணி களின் இடமாக விளங்குவதும் ஆலயம். தொழுகையும் தொண்டும் பக்தி என்ற நாணயத்தின் இருபக்கங்களாக அமைகின்ற நிலையில் பக்திபூண்டு ஆலயத்தில் இறைவனை எணங்கும் மக்கள் மத்தியில் இவ்விரு பக்கங்களும் பலமுடன் அமைவது இயல்பு. "பணிவார் பிணி போக்கும் பரமன்" என்னும் "என் கடன் பணிசெய்வது - தன் கடன் என்னையும் தாங்குவது" போன்ற பதங்கள் - செயலாக்க தொழிற்பாட்டை தன் பக்தர்கள் மத்தியில் கோயில் ஒன்று குடிகொள்ளச் செய்கின்றது. இன்னும் விரிவுபடுத்தின் தனிநபர் ஒருவரின் உருவாக்கந் சிந்தனை - படைப்புத்திறன் - இதனை பல்லினப்படுத்தி அதன் செயலாக்கற் படுநிலையினை தோற்றுவித்து அடைவுநிலைக்கு அழைத்துச் சென்று வெற்றியாளனாக உருமாற்றம் செய்கின்றது. சோழமன்னன் இராஜராஜனின் வரலாறும் அக்காலசமூக எழுச்சியும் இதனை மெய்பிக்கும்.

மறுபுறம் பல்வேறு வகைப்பட்ட ஆன்மீக மானுட நோக்குகளுக்கு உட்பட தனிநபர்கள் பலரை ஆலயச்சூழலில் பல்வேறு நிலைகளில் ஒன்றுகூடும் வெளிக்களமாகவும் ஒரு கோயில் அமைகின்றது. குடும்பத்தின் தனிநபர் ஒருவர் குறித்த ஒரு தேவையின் அடைவுநிலை களாக அவ்வாறான எண்ணம்கொண்ட மேலும் பலரோடு அங்கு ஒன்று கூடப்படுகின்றார். அவ்வாறான நிலையில் இன்று நாம் பேசும் அணியாக்கம் என்பதோ சமூக அணிதிரட்டல் என்பதோ இயல்பாக ஆலய நாளாந்த செயற்பாட்டில் ஒன்றாக அமைந்து விடுகின்றது. "கூடும்

மெய்தொண்டர் குழாத்துடன் கூட்டி" என்ற சுலேற்பதம் அடியார் அணியாக்கமும் தொண்டர்க்கு நாயகமும் என்ற சொற்றொடர் தலைமைத்துவ உருவாக்கத்தின் வெளிப்பாட்டையும் இங்கு காட்டி நிற்கும். ஆகவே சமூகத்தின் ஒன்றிணைவிற்கும் ஒருமித்த செயற்பாட்டிற் குமான உள, உடற்பயிற்சிகளை பால் வேறுபாடின்றி, பருவ - வயது வேறுபாடின்றி அகரத்திலிருந்து அ∴னம் வரை கற்பிக்கும் கலாசாலைகளாக இறை இல்லங்கள் துலங்குகின்றன.

இன்றைய நவீன காலகட்டத்தில் அழுத்தமாகப் பிரயோகிக்கப் படும் பங்கேற்பு அபிவிருத்தி, பங்களிப்பு அபிவிருத்தி ஆகிய அபிவிருத்தி, பங்களிப்பு அபிவிருத்தி ஆகிய அபிவிருத்தி எற்பாட்டு வாய்பாடுகள் மரவுக்காலத்திலே இருந்தே ஆலயங்களால் எமது சமூகச் சூழலில் விதைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஆலயங்களில் இடம்பெறும் பிரமோற்சவ காலம் அந்த ஆலயம் கொண்டுள்ள பக்தி வீச்சுப் பரப்பில் அகப்படும் அத்தனை பேரையும் தன்னுடன் இணைத்து அவர்கள் தங்கள் தங்கள் தகுதிக்கேற்ற செயற்பாடுகளை அங்கு செய்ய இடமளிக்கின்றது. யாழ். குடாநாடே கூடி இழுக்கும் நல்லூர் தேர், விழாக்காலத்தை ஒட்டி அங்கு நிகழும் பல்வேறுபட்ட கருத்தான நிகழ்வுகள், கலை விற்பனர் களின் திறன் வெளிபாடுகள், அறிவூட்டல் நிகழ்வகள், சமூக உபகார மக்கள் இயக்க நடிவக்கைகள், பாதுகாப்பு ஒழுங்கமைப்பு, சட்டபடி ஒழுகல் இவை போன்ற பல்வேற நிகழ்வுகளின் அறிமுகத்தையும் ஆற்றுப்படுத்தி யமையும் ஒழுக்கப்பாட்டினையும் அங்கு சமூகம் தரும் பிரசன்னமாகும் மக்களுக்கு இவ்வாலயம் அளிக்கின்றது. எனவே பல்வேறுபட்ட சமூக அபிவிருத்தி நிகழ்வுகளின் அரங்கேற்றக் களமாகவும் அருங்காட்சியக மாகவும் (உ-ம்: நல்லூர் நவதள கோபுரம் தரும் கட்டிட கலை வளர்ச்சி) சமூகம் ஒன்றிற்கோ அல்லது பலவற்றிற்கோ ஆலயம் விளங்குகின்றது. சுளை இனிப்பான பலாப்பழத்திலே அழுக்கு வண்டு துளை இடுவது போல சில சமூக மசய விரோத கும்பல்களால் அங்கு நிகழ்த்தப்படும் சில அவலங்களைக் கண்டு ஆலயங்களின் செழுமையை விமர்ச்சிப்பது பொருத்தமற்றதும் தகாததுமான ஒரு தரப்பின் தத்துவமாகும். குற்றம் களைந்து குணமே கொள்மின் என்ற சமூக விஞ்ஞான அணுகுமுறையில் ஆலயங்கள் ஒன்றல்ல பல சமூகங்களின் அறிவியல் கற்கை களமாகவும் கரும பீடங்களாகவும் திகழ்கின்றன என்பது அறிவறிந்த உண்மையாகும்.

எனவே எம் அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய மேற்காட்டிய விழுமிய தோற்றப்பாடுகளை பின்வருமாறு இலகு முறையில் எம்மனத்தில் எண்ணி அதற்கான செயலாக்க நிலைகளை நிலைப்படுத்தலாம்.

அவ்வகையில்

- சமய அறிவை செறிவாக செயற்படு நிலையில் நல்குகின்ற சமகால சக்திக்கேற்ற அறநெறிப்பாடசாலைகளை தேவையான, பொருத்த மான இடங்கள் தோறும் நிறுவி திருத்தமாக நடைமுறைப்படுத்தல்.
- பெற்ற சமய முறை அறிவினை பிள்ளைகள், மற்றோர் பழகிப் பயிலும் வண்ணம் சைவ கலாசார சூழலுக்குரிய களத்தை ஆலயங்கள் தோறும் பேணுதல் - உடல் உள ஒழுங்குபாடுகளாக இவை அமையும்.
- எமது கணக்க முறைகளின்போது இடம்பெறும் புத்திபூர்வமற்ற பல்லின செலவுகளைக் குறைநத்து, அச்சேமிப்புக்களை சைவ பாரம்பரியங்களை வளர்க்கும் நிறுவனங்களுக்கும், கதியின்றி கலங்கும் மாணவச் சமூகத்திற்கும் வழங்கி அவற்றின் எழுச்சியை வளம்படுத்தல்.
- சுத்தம் சுகம்தரும், சோறு போடும் எனப் பெரியோர் பேசும் கருத்துக்கட் கமைவாக வழிபாட்டு மையங்கள் அங்கு இடம்பெறும் சமயக்கருமங்களில் சுகநலம் தரும் நடவடிக்கைகளை பின்பற்றல் - பேணுதல்.
- சமூக அபிவிருத்தி என்ற பார்வையில் சமய நிறுவன அணுகு முறைகள் மூலம் ஏதுலிகள் போற்றல், வதுவையுறா வனிதையர் வாழ்வளிப்பு, சிறுவர் பெரியோர் பராமரிப்பு ஆகிய சமூகப் பணிகளை வலைப்பின்னல் முறையில் ஒழுங்கமைத்து நடாத்துதல்.
- சமயம் அறிந்து சமயம் சொல்லல் என்ற நாவலர் பாரம்பரியத் திற்கேற்ற வகையில் பொருத்தமான வழிபாட்டுக் காலங்களில் (வெள்ளி, செவ்வாய், உற்சவ காலங்கள்) சைவசமய சமூக இணைப்பை வழங்கக்கூடிய விழிப்புணர்வு கருத்துக்களங்களை நிகழ்த்தி மக்களைத் தட்டியெழுப்புதல்.

வளங்கள் பெருக! வாழ்க வையகம்! வளர்க நற்பணி!!

**தி. சிவதட்சணாமூர்த்தி**
மாகாணப் பணிப்பாளர் (வடக்கு)
பணிநிறைவுநிலை - இளைஞர் விவகார அமைச்சு

# வெறும் காலில் நடப்பது நல்லதா?

உணவருந்தும் போது கூட காலில் செருப்பணிந்திருப்பதை அந்தஸ்தாகக் கருதும் தலைமுறையில் நாம் வாழுகின்றோம்.

மிதியடிகள் மட்டும் பாதரட்சைகளாக இருந்த காலத்திலும் வெறும் காலில் நடப்பவர்களை நன்மையுள்ளவர்களின் கணத்தில் உட்படுத்தியிருந்தனர்.

ஒருவர் அணிந்திருக்கும் செருப்பின் விலையிலிருந்து அவருடைய சமூகம் நிலையை மதிப்பது இன்றைய சமூக உடற் பயிற்சிக்காக நடக்கும்போது இறுக்கிப்பிடிக்கும் "ஷுஸ்" அணிவது சமூகத்தில் கட்டாயமாகின்றது. "பிறர் நம்மைப் பற்றி என்ன நினைப்பார் கள்" என்ற தாழ்வு மனப் பான்மையே இக்கட்டாயத்தை ஏற்படுத்துகின்றது. வெறும் காலில் நடத்தால் பார்ப்பவர்கள் தங்களை எளியவர்கள் என மதிப்பிடுவார்களளே என்ற பிரச்சினை பலரையும் கவலைக்குள்ளாக் கின்றது.

வெறும் காலில் சிறிது நேரமாவது நடப்பது சரியான முறை யிலான இரத்த ஓட்டத்துக்கும் ஆரோக்கியமான வாழ்வுக்கும் இன்றியமை யாதது என்று நவீன மருத்துவ இயல் அண்மையில் வெளிப்படுத்தி யுள்ளது.

கரடுமுரடான தரையில் நடக்கும்போது பாதத்தின் கீழ் பாகம் நேரடியாக அழுத்தம் ஏற்கின்றது. இது உடற்செயல்பாட்டை ஊக்கு விக்கும் என்பது கண்டறிந்துள்ளனர். பாதத்துக்கு அடியில் விரல்கள் முதல் குதிகால் வரை அமைந்திருக்கும் ஒவ்வொரு பாகங்களும் நரம்பு கள், மூளை, இருதயம், சிறுநீரகம் முதலிய எல்லா உறுப்புக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளன. இதனால் ஒவ்வொரு பாகத்திலும் ஏற்படும் அழுத்தம், அதனுடன் தொடர்பு கொண்டுள்ள உறுப்பின் செயலாற்றலை துரிதபடுத்தும். பாதத்துக்கடியில் ஊசிகள் குத்திச் செய்யும் அக்யப்பங்சர் என்னும் சீன சிகிட்சையின் மறு உருவமே செருப் பில்லாமல் வெறும் காலில் நடப்பதில் இயற்கை நமக்களிக்கின்றது.

# கோயில் வாசலுக்கு நேராக நின்று தொழுவது ஏன் ஒழுங்கில்லாதது?

**கோயிலில்** வழிபாடுக்கு வரும் பக்தர்கள் ஸ்ரீ கோயிலுக்கு நேராக வாசலில் நின்று வணங்குவதை பெரியோர்கள் கண்டிப்பதுண்டு. அனேக கோயில்களில் இதைத் தவிர்க்கவே வேலிகட்டி அடைத்துள்ளது காணலாம். வாசலுக்கு நேராக நிற்காமல் இடது பக்கம் அல்லது வலது பக்கம் தள்ளி நின்று சுமார் முப்பது டிக்ரி சரிந்து நின்று வணங்க வேண்டும் விக்கிரகத்தில் குடி கொள்ளும் காந்தக் கதிர்கள் அதாவத ஜீவசக்தி பக்தரை நோக்கி பாம்பு டிவத்தில் வந்து ரெக்ணடிருக்கும். இந்நேரம் கை, கால்கள் சேர்ந்து, இரு கைகளும் தாமரை மொட்டு போல் பிடித்து கண்களைடைத்து தியானிக்க வேண்டும் என்பது ஆசாரியவிதி. அப்படி செய்யும்போது ஒன்றுக்கொன்று தொடும் விரல்கள் வழியாக மூளையின் ஜீவ சக்தி அதி வேகத்தில் உடல் முழுவதும் பரவும்.

இவ்வாறு உயிர் சக்தி பரவும் வழி ஆசாரியர்கள் வெளிப்படுத்தி யுள்ளனர். பூமிசக்தி சிறுவிரல் வழியாக. ஜலசக்தி மோதிர விரல் வழியும் அக்னி சக்தி நடுவிரல் வழியாகவும், வாயு சக்தி ஆள்காட்டி விரல் வழியா கவும் ஆகாய சக்தி பெருவிரல் வழியாகவும் உருவாகின்றன. பூமி சக்தி உடல் பலமும் ஜலசக்தி உயிர் பலமும், அக்னி சக்தி மனோ பலமும், வாயுசக்தி உணர்வு பலமும் ஆகாரய சக்தி ஆத்தும பலமும் வழங்கு கின்றது.



# பிள்ளையார் கோயிலில் தோப்புக்கரணம் இடுவது ஏன்?

தடங்கல்கள் ஒளிய கணபதி கோயிலில் வணங்கிவர பக்தர்களுக்கு மிகையான ஆர்வமிருந்தாலும் தோப்புக்கரணம் செய் வதில் பலரும் பின்தங்கி நிற்பதைக் காணலாம். அப்படியே செய்தாலும் கையைப் பிணைத்து இரு காதுகளிலும் தொட்டு உடலை ஒருமுறை குலுக்கி விட்டு செல்வதைக் காணலாம்.

*"வலம் கையால் வாமஸ்ரவனை மிடகைவிரலினால்*
*வலம் காதும் தொட்ட குழலிணை பிணைந்தநிலையில்*
*நிலம் கைமுட்டாலே பலகுறி தொடவே அடியனுக்கின்*
*நலம் காருண்யப்தே களக மமவிக்னம்கணபதே"*

மேலே சொல்லியிருக்கும் வரிகளை உச்சரித்துக் கொண்டே பிள்ளையாரை வணங்கிக் கொண்டு தோப்புக்கரணம் இடவேண்டும். அதாவது வலதுகையால் இடது காதும், இடதுகையால் வலது காதும் தொட்டு கொண்டு, இருகால்களும் பிணைத்து நின்று கொண்டு, கைமுட்டுக்கள் பலமுறை தரையலி தொட்டு கணபதியை வணங்க வேண்டும் என்பது விதி.

வேறெந்த தெய்வ சன்னதியிலும் தோப்புக் கரணம் இடுதல் என்ற விதிமுறையில்லை. ஆனால் கணபதி சந்நிதானத்தில் இது மிக முக்கியம். இடது காலின் மேல் ஊன்றி நின்று வலது கால் இடதுகாலின் முன்பக்கமாக இடது பக்கம் கொண்டு வந்து பெருவிரல் மட்டும் தரையில் தொட்டு நிற்கவும். இடது கை பெருவிரலும் ஆள்காட்டி விரலும் சேர்ந்து வலது காதிலும் வலது கை இடது கையின் முன் பக்கமாக இடது பக்கம் கொண்டு வந்து முன்கூறிய இரு விரல்களால் இடது காதையும் பிடிக்க வேண்டும் பின்பு குனிந்து வணங்கி நிமிர்ந்து வருவதே தோப்புக் கரணத்தின் முறை.

பக்தரைப் பொறுத்து இது எத்தனை முறை செய்ய வேண்டும் என்று முடிவு செய்யலாம். பொதுவாக மூன்று, ஐந்து, ஏழு, பன்னிரண்டு, பதினைந்து, இருபத்தொன்று, முப்பத்திஆறு என்று பல கணக்கில் செய்வதுண்டு.

இவ்வாறு செய்வதில் பக்தரிடமிருந்து தடங்கல்கள் விலகிச் செல்லும் என்றே நம்பிக்கை. அறிவியல் சம்பந்தப்படுத்திப் பார்ப் போமானால் இதை புத்தியையுணர்த்தும் ஓர் உடற்பயிற்சியாக இதைக் காணலாம். இது இரத்த ஓடத்ததை உணர்வடையச் செய்யும். மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும் என்று கண்டு வருகின்றோம்.

# துளசி இலையை காதுக்குப் பின் வைப்பது ஏன்?

காதுக்குப் பின் துளசிக்கதிர் அல்லது இலை சூடுவதற்கு இக் காலத்தில் யாரும் தயாராக மாட்டார்கள். அப்படி சூடுபவர்களை "காதில் பூவைத்தவன்" என்று ஏளனமாகக் கூறுவதுண்டு.

ஆனால் காதுக்குப்பின் துளசி வைப்பதனால் பெரும் பயன டைந்தனர் பண்டைய மக்கள். மனித உடலில் மிகக் கூடுதல் உறிஞ்சும் சக்தியுடையது காதுக்குப் பின்புறம் ஆகும் என்பது விஞ்ஞானம் நிரூபித் திருக்கின்றது. துளசியின் மருத்துவ குணங்கள்களை நாம் நன்கறிவோம் இந்த மருத்துவ குணங்கள் காதுக்குப் பின்னுள்ள சரும வழியாக ஊடுரு விச் செல்லும். இதுவே பழங்காலத்து மக்கள் காதுக்குப்பின் துளசியி லையை சூடிவந்ததும், பின் சந்ததிக்கு அதைக் கற்பித்ததும்.

பழக்காலத்திலுள்ள வீடுகளில் துளசி மாடம் கட்டி துளசியை ஓர் புனிதச் செடியாகப் பராமரித்து வந்தனர்.

சூரிய ஒளி கிடைக்கும் இடத்தில் கிழக்குப் பக்கத்து வாசலுக்கு நேராக துளசிமாடம் கட்ட வேண்டும் என்று ஆசாரியர் போதித்துள்ளனர். வீட்டின் தரையை விட தாழ்ந்த மட்டத்திலாகாமல் குறிப்பிட்ட அளவில் துளசித் தரை அமைக்க வேண்டும். துளசித் தரையில் நடுவதற்காக கிருஷ்ணதுளசி தேர்ந்தெடுக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. துளசிச்செடிக்குப் பக்கம் அசுத்தமாகச் செல்வதாகாது. ஜெபம் செய்து கொண்டே அதன் பக்கம் செல்ல வேண்டும். துளசியை தினமும் மூன்று வேளை வலம் வரவேண்டும். வலம்வரும்போது

"பிரசீத துளசி தேவி
பிரசீத ஹரி வல்லபே
க்ஷீரோதமதநோத்புதே
துளசி த்வாம் நமாம்யகம்"

என்ற மந்திரம் சொல்லவேண்டும். துளசி பறிக்கும்போது

"துளஸ்வமுத சம்பூதா
சதா த்வம் கேசவப்ரியே
கேச வார்த்தம் லுனமி த்வாம்
வரதா பவ சோபனே"

மாலைநேரமும், ஏகாதசிக்கும், செவ்வாய், வெள்ளி நாட்களி லும் துளசிப்பூ பறிக்கலாகாது என்றும் விதியுண்டு. பூஜைக்கல்லாமல் துளசிப் பூ பறிக்கவும் கூடாது.

# இறைவனை வணங்கித் திரும்பும்முன் ஏன் தீர்த்தம் அருந்த வேண்டும்

**கோ**யில் தொழுதுவிட்டுத் திரும்பிவரும் முன் தீர்த்தம் வாங்க வேண்டும் என்றும் அதன்பின் பிரசாதம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறுவதுண்டு.

தெய்வ அம்சத்தை மந்திர ஒலியுடன் அபஷேகம் செய்தெடுத்த நீரே தீர்த்தமாக பக்தர்களுக்கு வழங்குவது. நம்பிக்கை மற்றும் சாஸ்த்திரத்தின் இரண்டு குணங்களும் அடங்கியதே தீர்த்தம். தேவ விக்கிரகத்தின் ஸ்பரிசத்தாலும் மந்திர ஒலிகளாலும் புனிதமாக்கப்பட்ட பரிசுத்தம் முதலாவது குணம். துளசி முதலிய மூலிகைகளின் மருத்துவ குணங்களே இரண்டாவது.

வலது கையின் ஐந்துவிரலும் மடங்கும் போது உண்டாகும் கைக்குழியில் தீர்த்தம் வாங்க வேண்டும் என்பது விதி கைக்குழியை அப்படியே உயர்த்திப்பிடித்து கையில் உயர்ந்து காணப்படும் சந்திர மண்டலத்துக்கும் சுக்கிர மண்டலத்துக்கும் மத்தியிலுள்ள இடுக்கு வாயிலாக தீர்த்தம் அருந்தவேண்டும்.

இவ்வாறு தீர்த்தம் அருந்துவதனால் நன்மைகள் பல என்பதை மேநாட்டு ஆராய்ச்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளன. தீர்த்தங்களில் சேர்க்கும் துளசி, குவளை, தாமரை, மந்தாரை, தெற்றி, மஞ்சள் என்பவையின் மருத்துவ குணங்கள் முக்கியமாக இரத்தஓட்டம் உணர்வடைகின்றது. இரத்தத்திலுள்ள அசுத்தங்களை அகற்றி உடலை சுத்தீகரிக்கின்றது.

இந்து மத ஆசாரத்தில் தீர்த்தம் அருந்துவதின் அவசியத்தைப் பற்றி விளக்கமுண்டு. பொதுவாக உதடுகளில் உமிழ்நீரில்லாவிட்டாலும் வாய்க்குள் உமிழ்நீர் இருக்கும் வாய்க்குள் நாவின் அசைவின் விளைவாக உதடுகளும் எச்சில் ஆக மாறும். அதனால் உதடுகள் வாய்க்குள் செலுத்திவிட்டு தீர்த்தம் அருந்தவேண்டும் இரு உதடுகளும் தொடு வதைத் தவிர்க்கவேண்டும் அருந்திய தீர்த்த ஜலத்தின் மிச்சமாக உள்ளங்கையில்லிருப்பதை தலையிலும், முகத்திலும் உடலிலும் தெளிக்கவேண்டும் வாங்கிய தீர்த்தத்தில் ஒருதுளிகூட தரையில் விழச் செய்யலாகாது.

# சங்கூதுவதில் என்ன மகத்துவம்?

கடலிலிருந்து கிடைக்கும் ஒரு செத்துப்போன பிராணியிலிருந்து எழும்பும் ஓசையே சங்கொலி என்றும் இது சுற்றுச் சூழ்நிலையை ஒலி மாசுபடிய வைக்கும் என்றும் இறுதித் தேர்வில் எழுதிய ஒரு மாணவனைக் குறித்து ஏதோ பத்திரிகையில் படித்த ஞாபகம்.

அந்த மாணவன் மீது பெரம் தவறு எதுவும் இல்லை என்றே கூற முடியும். ஏனென்றால், அந்த மாணவன் படித்திருந்ததும் பெரியவர்கள் போதனையால் புரிந்து கொண்டிருந்ததும் அவ்வளவே ஆனால்,

சங்கொலியின் மகிமையைப் பற்றி சாஸ்திரமும் ஆசாரவிதிகளும் ஏராளம் தகவல்கள் வெளியிட்டுள்ளன.

பொதுவாக கோயிலிலே நாம் சங்கொலி உயருவதைக் கேட்கின்றோம். தீ பாராதனை வேளையில் மந்திரம் ஜெபிக்கும் ஓசை, மணி மற்று சங்கின் ஓசை என்பவை காதுக்கு இன்பமூட்டும் போது, தேவ விக்கிரகங்களுக்கு முன் திபச்சுடர்கள் உயருவதும் காணும்போது பக்தரில் பரவசம் நிறைவதும் மனதில் நிம்மதி பிறப்பதும் நாம் கண்டறிந்திருக்கின்றோம்.

இறைவனைச் சார்ந்த "ஓம்" எனும் மங்கள ஓசையே சங்கிலிருந்து எழும்புவது.

விளம்பர ஒலியாகவும் சங்கொலிகளைக் காண்பதில் தவறில்லை. குருஷோத்திர யுத்தத்தின் ஆரம்பத்தில் போர்க்களத்தில் எழுப்பக்கேட்ட சங்கொலி அறிந்தவர் மனதிலிருந்து ஒருபோதும் மறைவதில்லை.

சங்கை உரைத்து சில நோய்களுக்கான மருந்துகலவையில் சேர்ப்பதுண்டல்லவா! இதிலிருந்து சங்கில் ஓர் தனிப்பட்ட மருத்துவ குணம் இருப்பதை அறியலாம்.

சங்கிலிருந்து உயரும் ஒலி அலைகளைப் பெற்றுக்கொள்ளும் நபரின் மூளையில் பயன் தரும் அதிர்வுகள் உண்டாகும் என்று நவீன சாஸ்திரம் கண்டறிந்துள்ளது.

# தியானம் வாழ்க்கைக்கு பயனளிப்பது எப்படி?

தியானம் வாழ்க்கைக்கு பயனளிக்கும் என்று பழைய தலைமுறை நம்மை கற்பித்திருக்கின்றது.

சாந்தமாயிருந்து ஒரே சிந்தனையுடன் தன்னிலும் தன்னைச் சுற்றியுள்ள எல்லாவற்றிலும் குடிகொள்ளும் ஜீவசக்தி இறைவன் அருளும் சக்தி என்று மனதில் கொண்டுள்ள ஆராதனையே தியானம்.

யுகங்கள் கழியும் போது நிகழவிருக்கும் மனதின் சுத்திகரிப்பு இந்த ஜன்மத்திலேயெ பரிணமிக்கும் சாதனையென்று தியானத்தை சிறப்பிக்கலாம்.

தியானத்தின் பயன்களை நவீன அறிவியல் அங்கீகரித்துள்ளது. மனதுக்கும் புத்திக்கும் சக்தி பெற ஒரே ஒரு பாதை மட்டுமே நவீன விஞ்ஞானம் உபதேசிக்கின்றது. அது தியானத்தின்பாதை. மனதை ஒரு நிலைப்படுத்தி ஒரு தனிப்பட்ட புள்ளியில் மையப்படுத்தி தியானம் செய்தால் மனதை அலட்டும் எல்லா சிந்தனைகளிலிருந்தும் விடுதலை பெறலாம்.

தியானத்தின் ஆழமான நிலையில் செல்லும்போது மூளை யிலுள்ள பீடா அலைகள், ஆல்ஃபா, காமா, டெல்டா, தீடா என்ற அலை களாக மாறுதலைகின்றன. என்று அறிவியல் கற்பிக்கின்றது. இவ்வலை கட்கு மூளையை அனேக மடங்கு விருத்தியடைந்து செயல்படச் செய்யும் என்பது ஈ ஈ ஜி ஆராய்ச்சி வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் தங்கள் மருத்துவ நூல்களில் தியானத்திற்குத் தகுந்த இடமளித்துள்ளன.



# காலாட்டுவது வீட்டுக்குத் தரித்திரமா?

உயர்ந்த இருக்கைகளிலோ கட்டிலிலோ குழந்தைகள் அமர்ந்து காலாட்டுதைக் கண்டால் "வீட்டுக்குத் தரித்திரம்" என்று கூறி குழந்தைகளை அதட்டுவது வழக்கம். இது அன்றைய நம்பிக்கை.

காலாட்டுவதால் குடும்பத்துக்கு குழப்பங்கள் நிகழும் என்று நம்பியிருப்பதனால் அது எப்படி என்றறிய சிறுவர்கள் பெரியவர்களை கேட்பது வழக்கம். காலாட்டினால் வீட்டில் தரித்திரம் வரும் என்று அவர்கள் சிறுவயதில் கேட்டிருந்ததையே சிறுவர்களிடம் கூறிவந்தனர். இதல்லாமல் எந்த விளக்கமும் அளிக்க அவர்களால் இயலவில்லை.

இதை ஒரு மூடநம்பிக்கை என்று சருதி அதை அலட்சியப் படுத்துவதிலேயே சிறுவர்களுக்கும் ஒரு திருப்தி.

காலாட்டுவதனால் மிக அதிகம் சக்தி வீணாகின்றது. இப்படி சக்தி வீணாவதனால் மட்டுமல்ல காலாட்டுவதைத் தவிர்ப்பது.

காலாட்டும் குழந்தையின் கால் தட்டி விலைமதிபுள்ளதும், பற்றாக்குறையுள்ளதுமான பொருட்கள் நஷ்டம் வரும் என்பதிலிருந்தே காலாட்டினால் வீட்டுக்குள் தரித்திரம் வரும் என்று கூறி வருவது. பண்டைக்காலத்தில் கட்டிலுக்குடியில் வயோதிபர்களின் மருந்து, எண்ணை, துணி, பணம் முதலிய பல பொருட்கள் வைத்திருந்தனர். வெற்றிலை துப்பும் தாம்பாலப் பாத்திரமும் கட்டிலினடியில் வைப்பதே வழக்கம்.

கீழ்ப்படியாமல் காலாட்டும் சிறுவர்களால் குப்பி, பரணி, பானை முதலியவை சரிந்து விழுந்து பொருள் நஷ்டத்துக்கும் காரணமாகும்.

சிறுவர்களை உணர்த்தும் வகையில் வீட்டில் தரித்திரம் வந்து சேரும் என்ற கூற்றயே திணித்தால் காலாட்டுவதை முற்றிலும் தவிர்க்கலாம். காலாட்டும் போதுதான் நம்மிலிருந்து மிக அதிகம் சக்தி வீணாகின்றது என்ற நவீன சாஸ்திரமும் சிறுவர்களை ஏற்றுக் கொள்ள வைப்பது கடினம் தான்.

# உட்கார்ந்த நிலையில் உணவருந்த வேண்டும் என்பது ஏன்?

உணவருந்தும் கலாச்சாரம் மாறி வர இன்று நம்நாட்டில் நடந்தும் நின்று கொண்டும் உணவருந்துகின்றோம். குழந்தைகளுக்கும் அவ்வாறே உண்ணப் பழக்குகின்றோம்.

சாணம் பூசிய தரையில் பனயோலைத் தடுக்கில் சப்பணமிட்டு உட்கார்ந்து முன்பக்கப் பார்வையுடன் உணவருந்த வேண்டும் என்பது தொன்றுதொட்டுள்ள பழக்கம். தரையில் பல கையிட்டு அதில் சப்பாண மிட்டு அமர்ந்து நம் நாட்டினர் உணவருந்துகின்றனர். "ஷூஸ்"களைக் கழற்றாமல் காலின் மேல் கால் வைத்து டைனிங் டேபிலுக்கு முன்னா லிருந்து டெலிவிஷன் நிகழ்ச்சியை ரசித்துக்கொண்டே உணவருந்துவதை விட நம் முன்னோர்கள் பாணி அழகுள்ளது. அவ்வாறு அமர்ந்து உண்பதில் உடலுக்கு சில பயன்கள் உள்ளதாக நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர். ஆனால் சுக போகங்களின் நடுக்கடலில் அலைந்து திரியும் நவீன மக்கள், இந்த வாழ்க்கை இறைவன் அருளியது என்பதை உணர்வதில்லை.

நாம் உணவருந்தும் போது உடலின் முட்டுக்களில் அசைவு ஏற்படுகின்றது என்று இன்றைய சாஸ்திரம் அறிவிக்கின்றது. இந்த அசைவு முட்டுகளுக்கு அதிகபாரம் உண்டாக்கும். அமர்ந்த நிலையில் உணவருந்தினால் இந்த பாரத்தைக் குறைக்க இயலும். மேலும் நின்று கொண்டு உணவருந்தினால் மித மிஞ்சி உணவருந்த வாய்ப்புண்டு. அதிகமாக உண்ணுவதும் உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்பதும் நாம் அறிவோம். வயிறு நிரம்ப உண்ணாதவர்கள் பல நோய்களிலிருந்தும் விலகியிருப்பார்கள் என்று மருத்துவத்துறை பல வழியில் அறிவித்துள்ளது.



# வலது கால்வைத்து ஏன் நுழைய வேண்டும்?

நம் முன்னோர்கள் வலதுக்கு மிக அதிக முக்கியத்துவம் அளித்திருந்தனர். வலது பக்கம் திரும்பி எழு வேண்டும், வலது கால் வைத்து நுழைய வேண்டும். வலதுகையால் உணவருந்த வேண்டும் இவ்வாறு வலதுக்கு மிக முக்கியத்துவம் இருந்து வருகின்றது.

இடதுகையால் தண்ணீர் குடிக்கும் குழந்தைகளையும் பாட்டிமார் கண்டிப்பதுண்டு. வல்து பக்கத்தால் செய்யப்படும் செயல் களும் வெற்றிபெறும் என்ற எண்ணமும் மனதில் கொண்டிருக்கின்றோம்.

ஒரு வீட்டிற்குள் நுழையும் போது வலது கால் வைத்துச் செல்ல வேண்டும் என்பது விதிமுறை இவ்வாறு செய்யத்தவறினால் செல்பவருக்கும் வீட்டுக்காரருக்கும் துன்பமுண்டாகும். மனித உடலில் வலது பக்கம் மிக முக்கியமானது என்பது எவருக்கும் புரிந்துகொள்ள முடியும்.

ஒரு நபர் வலது காலை அழுத்தி மிதித்து நடக்கும்போதே அவர் வெற்றியின் பாதையில் செல்கின்றனர் என்று புரிந்துகொள்ளலாம். ஆன்மீகமாக சிந்தித்துப் பார்த்தாலும் வலது சக்திக்கு தனிப்பட்ட வருணை இருப்பதை காணலாம். ஒரு மனிதனை சோதனை செய்து பார்க்கும்போது அவனது வலது பாகத்து முக்கிய நரம்புகளின் செயல் பாடுகள் அவனை கூடுதல் கடமைகளைச் செய்ய வல்லவனாக்குகின்றன என்பதை காணலாம். அதாவது வலது பாகத்தால் திறமையுடன் செயல் படலாம் என்று பொருள். மனநிலையும் வலது பாகத்தை சார்ந்திருக் கின்றது. வலது கால் வைத்து பிரவேசித்து அதேபோல் வெளியேறுவதும் சுபலட்சணம் என்று கருதுகின்றோம். மனசாஸ்திரமும் இதை ஆமோதிக் கின்றது.



# கர்ப்பிணிக்கு நீதிக் கதைகள் சொல்லிக் கொடுப்பது எதற்காக?

கர்ப்பவதிகட்கு நீதிக்கதைகள் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்ற மூதுரை மருத்துவத்துறையும் முழுதாக அங்கீகரித்துள்ளது.

முற்காலத்தில் கர்ப்பவதிகளான பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஆசாரங்கள் விதித்திருந்தனர். அதில் மிக முக்கியமாகக் கூறப்பட்டிருந்தது. நீதிக்கதைகள் வாசிப்பதும் கேட்பதும் நீதிக்கதைகள் கர்ப்பிணிகட்கு சொல்லிக் கொடுப்பதில் பாட்டிமார் தனிப்பட்ட கவனம் செலுத்தியிருந்தனர்.

கர்ப்பிணிகள் கேட்ட கதைகள் கருவிலிருக்கும் சிசு உட் கொண்டதான கதைகளும் நம்நாட்டிலுண்டு.

கர்ப்பக் காலத்தில் நன்மையுடையதும் நீதியுடையதுமான கதைகள் கேட்பதன் விளைவாக அப்பெண் மகிழ்வுற்றிருப்பாள். இந்த காலகட்டத்தில் மனதுக்கு மகிழ்ச்சியளிப்பதும் சிக்கல்களில்லா ததுதமான உரையாடல்கள் கேட்க வேண்டும் என்று நவீன சாஸ்திரம் கூறுகின்றது. அது மட்டுமல்ல கோபமுண்டாக்கக் கூடிய பேச்சுக்கள் கேட்கலாகாது என்றும் கூறுகின்றது.

பும்சவன சமஸ்காரம் என்ற பேரில் முற்காலத்து மக்கள் ஆச ரித்து வந்த ஓர் சடங்கின் பாகமாகவே நீதிக்கதைகள் கர்ப்பிணிகளைக் கேட்கச் செய்திருந்தனர். நன்மார்க்க சிந்தனைகளுடன் மாசற்று வாழும் ஒரு கர்ப்பிணிக்குப் பிறக்கும் சந்ததி நற்குணங்களுடன் விளங்கும் என்ற நம்பிக்கையை நவீன சாஸ்திரமும் அங்கீகரிக்கின்றது. முன் கோபத் துடனும் அங்காரியாகவும், நன்மார்க் சிந்தனைகளில்லாமல் வாழ்பவள் பெற்றெடுக்கும் சந்ததி நன்குணங்களை உடையதாக இருக்காது என்பது நிஜம் மன நிம்மதியும் திருப்தியும் நிறைந்த கர்ப்பிணிக்கு நல்ல குழந் தையைப் பெற்றெடுக்க இயலும்.

இதற்காகவே முன்னோர்கள் இத்தகைய ஆசாரங்களை அங்கீகரித்திருந்தனர்.


# வாசற்படியில் உட்காரக் கூடாது ஏன்?

வாசற்படியில் இருக்கும் சிறுவர்களை பாட்டிமார் விரட்டி அடிப்பதுண்டு. வாசற்படியில் அமரக் கூடாது என்று அன்புடன் உபதேசிப்பதும் உண்டு. வாசல் வழியாக வரும்போகும் நபர்கள் தட்டி விழும் சாத்தியம் உள்ளதாலே இவ்வாறு கூறுகின்றனர் என்று கருதி வருகின்றோம்.

ஆனால் வாசற்படியிலோ நிலைப்படியிலோ இருக்கக்கூடா தென்பது சரியான காரணத்துடன் என்பது கண்டறிந்துள்ளனர். "டௌசிங்ராட்" என்ற கருவியை வாசற்படியில் பிடித்தால் வாசற் படியிலிருந்து எதிர் சக்திகள் (நெகடிவ்ஃபோர்சஸ்) வெளியாவது காணலாம். இதனால் வாசற்படியில் அமர்ந்தால் நம் உடலில் எதிர்சக்திகள் புகுந்து செல்லும்.

இதை அன்றே புரிந்து கொண்டிருந்த ஆசாரியர்கள் வாசற்படியில் உட்காருவதை சக்தியாக எதிர்த்திருந்தனர். வாசற்படிக்கு உட்பக்கமோ வெளிப்பக்கமோ நின்று எதையும் வாங்கவோ கொடுக்கவோ கூடாதென்பதற்கும் சரியான காரணமும் இதுவேதான்.

வாசல் நிலையின் நாலு பக்கங்களும் சமசதுரவடிவிலுள்ள தானால் நெகடிவ்சக்தி வெளிவருகின்றது வாஸ்து சாஸ்திரத்தை மிக முக்கியமாகக் கருதும் சீன மக்கள் தங்கள் வீடுகளில் அமைக்கும் வாசல்கள், மற்றும் ஜன்னல்களின் நிலைகள் வேறு வடிவத்தில் மேல் பாகம் நோக்கி வளைந்திருக்கக் காணலாம். இது நெகடிவ் சக்திகளைத் தவிர்ப்பதற்காகவே. நமது கோயில் வாசல்களிலும் இவ்விதமே அமைத் துள்ளனர்.



# வாசற்படியில் தலை வைத்து தூங்கக்கூடாது என்று கூறுவது எதனால்?

சிறுவர்களானாலும் பெரியவர்களானாலும் வாசற்படியில் தலை வைத்துத் தூங்கினால் பாட்டிமார் திட்டுவது வழக்கம்.

வாசற்படியில் தூங்குவது தீங்கானது. தரித்திரம் என்றெல்லாம் கூறி வந்தனர். ஆனால் தெளிவான ஒரு காரணம் கூற இயலவில்லை. இதனால் முதியவர்கள் வாசற்படியில் தூங்கிய சில கதை பாத்திரங்களுக்கு நேர்ந்த துன்பங்களைக் கூறி போதித்து வந்தனர்.

அந்த கதைகளைக் கேட்பவர்களுக்கு அது இயல்பாகவே மனக் குழப்பத்தை உருவாக்கும் இதனால் அவர்கள் வாசற்படியில் தலை வைத்துத் தூங்குவதைத் தவிர்க்க நேரிடும். இதனால் கூறுபவருக்கும் மகிழ்ச்சி, கேட்பவருக்கும் திருப்தி.

விஞ்ஞான முறையில் ஆராய்ந்தால் பாட்டியின் கதையில் கருத்தில்லையானாலும் கூறிய ஆழ்ந்த கருத்துள்ளதைக் காணலாம்.

பாரதத்தில் மட்டுமல்ல சீன நாட்டிலும் இந்த நம்பிக்கை கடைப் பிடிக்கின்றனர். சதுர வடிவில் அமைத்த வாசற்படிகள் அவர்கள் தவிர்த்துள்ளனர். அதனால் வாசற்படியின் மேல் பாகம் வளைந்து "ஆர்ச்"ரூபத்தில் அமைக்கின்றனர்.

ஒரு "டௌசிங்ராட்" உபயோகித்த வாசற்படியைப் பரிசோதித் தால் நெகடிவ் சக்திகள் பரவுகின்றதை உணரலாம். வாசற்படியில் தலை வைத்துத் தூங்கினால் இவ்வாறு பரவும் சக்திகள் நமது மூளையை பாதிக்கும் என்று கண்டறிந்துள்ளனர்.

வாசற்படியில் தலை வைப்பதைத் தடைசெய்வது இதனால் என்று பாட்டிக்கும் தெரியாமலிருந்ததா?



# படிக மாலையின் நன்மை என்ன?

அழகை எடுத்துக் காட்டுவதற்காகவே நகைகள் அணி கின்றோம். உடலில் பதிநான்கு இடங்களில் அணியும் நகைகளுக்கு ஆறு முக்கிய நன்மைகள் உண்டு.

அழகு, தெய்வப்பிரியம், ஆத்தும தரிசனம், ஆரோக்கிய இரட்சை, ஸதானக் குறிப்பு, தோஷ நிவாரணம் என்ற நன்மைகளுக் காகவே நகைகள் அணிகின்றோம்.

பதிநான்கு உலோகங்களின் சின்னமாக தலையிலும், நெற்றியிலும், காதிலும் மூக்கிலும் உதட்டிலும், கழுத்திலும், தோளிலும், புஜத்திலும், கையிலும், மார்பிலும், இடுப்பிலும், பாதங்களிலும், கால் விரலிலும், கைவிரலிலும் நகைகள் அணிவதுண்டு

தங்கமும் வெள்ளியும் அணியும் போது கைக்கொள்ளும் நம்பிக்கைகள் போலவே படிக மாலை அணிவதன் பின்னும் சில நம்பிக்கைகள் உண்டு. இதை அணிய உத்தமமான நட்சத்திரம் கார்த்திகையாம். ஒரு நாள் பசுவின் சாணத்தில் மூழ்கவைத்து, படிக மாலையை தண்ணீர், பால் என்பவற்றில் கழுவி குருவிகள் உதவியால் அணிய வேண்டும் என்பது ஆசாரவிதி.

எந்தக்காலமானாலும் வெப்பத்தை தடையும் சக்தி இம்மாலைக் குண்டு. கிரகங்கள் மனிதரில் செலுத்தும் செல்வாக்கைக் கட்டுப்படுத்த இம் மாலைக்கு இயலும். இரவுவேளை இம்மாலையை தண்ணீரில் இட்டு வைத்து மறுநாள் அத்தண்ணீரைக் குடித்தால் ஆண்மை விருத்தி யடையும் என்று நம்புகின்றனர். பௌர்ணமி நாள் படிகமாலை அணிந் தால் உடல்சக்தி கூடும் என்றும் தம்பதிகள் இம்மாலை அணிந்து தூங்கக் கூடாதென்றும் விதிக்கப்பட்டுள்ளன.



# பால் காய்ச்சும் வீட்டில் மாவிலைத் தோரணங்கள் கட்டுவது எதற்கு?

**புது**மனை கட்டி முடித்து அதற்கு புகுவிழா நடத்தும்போது மாவிலைத் தோரணம் கட்டுவது வழக்கம். இதன் பயன்கள் தெரியா விட்டாலும் இவ்வாறு செய்வதில் பெரும்பான்மையான மக்கள் கருத்தாக இருந்து வருகின்றனர்.

பால் காய்ப்புச் சடங்குகள் எவையெல்லாம் என்பது அனே கருக்கும் தெரியும். புதிதாகக் கட்டிய வீட்டில் நடுவில் அமைந் திருக்கும் அறையில் இதற்காக வைக்கப்பட்ட புதிய அடுப்பில் வீட்டுத் தலைவி ஒரு புதுப் பானையில் பாலை ஊற்றி சூடாக்குகின்றாள். பால் கொதித்து பொங்கி நிறைந்து கவிந்தொழுக வேண்டும் என்பது நம்பிக்கை. இதைக் காணும் போது வீட்டுத் தலைவருக்கும் வந்து சேர்ந் திருப்போருக்கும் ஒரே கொண்டாட்டம்தானே! பரிசுத்தமானதால் பாலைச் சூடாக்கி புதுமனைக்குள் செல்கின்றோம்.

இதற்குப் பின்னால் ஆழமான ஆத்மீக உண்மைகள் இருப்பதாக ஆசாரியார் கூறுகின்றனர். எப்படியானாலும் பால் காய்ச்சும் வீட்டுக்குள் செல்லும்போது நம்மை முதலாவது வரவேற்பது பாசலில் மாவிலைத் தோரணங்கள். ஆனாலும் இதை யாரும் அவ்வளவு பொருட்டாக எடுப்பதில்லை.

மாவிலைத் தோரணத்துக்குப் பின்னாலுள்ள உண்மைகளை பண்டைக் காலத்திலேயே அறிந்திருந்ததனால் இந்த வழக்கம் இன்றும் உள்ளது. பால்காய்ப்பு என்றல்ல எல்லா முக்கிய சடங்கிற்கும் சிலர் மாவிலையை கனப்படுத்துவதுண்டு.

பால் காய்ச்சும் சடங்கிற்காக அனேகம் மக்கள் அந்த வீட்டில் வந்து சேருவதுண்டு. அப்படி அதிகம் பேர் வந்து சேருமிடத்தில் வாயு அசுத்தமாவது இயற்கை. இந்த அசுத்த வாயுவை சுத்தம் செய்ய மாவிலைக்கு இயலுமாம். மாவிலையை வாசலிலும் வீட்டிற்குள்ளும் கட்டு வது இதற்காகவே. இதற்குப் பதிலாக மாவிலை வடிவில் பலாஸ்டிக் இலைகள் கட்டுவதுண்டு. இதனால் பயனில்லை என்பது மட்டுமல்ல தீமையுண்டு என்பதே உண்மை.

மாவிலைக்கு நோயணுக்களின் சக்தியை அழிக்க இயலும் என்றறிந்திருந்த முன்னோர்கள் மாவிலையால் பல்துலக்குவதுண்டு. கிணற்றை சுத்தம் செய்ய இறங்கும் போது கிணற்றிலுள்ள அசுத்த வாயுவில் சிக்கி மூர்ச்சையாகும் நிகழ்வுகள் நாம் அறிந்துள்ளோம். ஆழமான கிணற்றில் இறங்குவதற்கு முன் மாமரத்தின் ஒரு கிளையை

# பெண்கள் ஏன் காலுக்கு மேல் கால் வைத்து அமரக் கூடாது?

**பெண்கள்** கடைப்பிடிக்க வேண்டிய சில ஒழுங்கு முறைகளை மனு மகரிஷி முதல் வைகுண்ட சுவாமி வரை பலரும் போதித்துள்ளனர். இவற்றை இன்றைய பெண்ணுரிமை வாதிகள் அங்கீகரிப்பது மிக அபூர்வம்.

ஆனால் பெண், முன்னோர்கள் விதித்திருந்த ஆசாரங்களைக் கடைப்பிடிக்கத் தயாரானால் அது குடும்பத்துக்கும் நாட்டுக்கும், அதன் விளைவாக பிரபஞ்சத்துக்கும் நன்மையுண்டாகும் என்பதில் சந்தேக மில்லை.

பெண்கள் காலுக்கு மேல் கால்வைத்து அமரக் கூடாதென்று பழைய தலைமுறை எப்போதும் ஞாபகப்படுத்துவதுண்டு. அது அகங்காரத்தின் அறிகுறி என்று அவர்கள் சிறப்பித்திருந்தனர் ஆனால் நவீன யுகத்தில் பல பெண்களும் ஆணுக்குச் சமமாக நினைப்பது இது போன்ற சிறு விஷயங்களில் மட்டுமே என்பதைக் காணலாம். கால் தாழ்த்தி வைத்திருப்பதாலோ, ஆண்களையோ, முதியோர்களையோ கண்டால் எழுந்து மரியாதை செலுத்துவதையோ ஒரு குறைபாடாகக் கருதி வருகின்றனர்.

ஆனால் பெண்களில் எப்போதும் காலின் மேல் காலை வைத்து அமரும் வழக்கமிருந்தால் அது தீமை விளைவிக்கும் என்பது மருத்துவத்துறை குறிப்பிட்டுள்ளது. அப்படி செய்வது திருமணமானவர்களுக்கும் கன்னிப்பெண்களுக்கும் தீங்கானது.

கால்மேல் கால் வைத்து அமரும் வழக்கமிருந்தால் பெண் களுக்கு காலப்போக்கில் கருப்பை சேதமடைய வாய்ப்புண்டு என்பதை முன்னோர்களும் புரிந்துகொண்டுதான் இந்தப் போதனையை விட்டுச் சென்றனர் போலும்!



## ஆரத்தி எடுப்பதன் பின்னுள்ள இரகசியம் என்ன?

**விஞ்ஞானமும்** நவீனமும் வாதமும், முற்போக்குவாதமும் எல்லாம் நம் சமூகத்தில் மிகவும் செல்வாக்கு செலுத்தியிருந்த போதிலும் சில நம்பிக்கைகள் இன்றும் தவிர்க்க முடியாதவையாக நீடித்து நிற்கின்றன. இதில் ஒன்று தான் ஆரத்தி எடுப்பது. தூரத்துப் பயணங்கள் கழிந்து வரும் குடும்பத்தினர், திருமணம் முடிந்து மணமகன் வீட்டுக்கு வரும் தம்பதிகள், மகப்பேறு முடிந்திருக்கும் தாய் முதலியோரைப் பொதுவாக ஆரத்தி எடுப்பதுண்டு. தண்ணீரில் மஞ்சள் அரைத்துச் சேர்த்து அதில் சிறிது சுண்ணாம்பு சேர்க்கின்றனர். மஞ்சளும், சுண்ணாம்பும் கலந்த தண்ணீருக்கு சிவப்பு நிறம் வருகின்றது. இதை ஒரு பரந்த பாத்திரத்தில் எடுத்து அதற்கு இரு பக்கங்களிலும் இரண்டு தீச்சுடர்கள் எழுப்பி சம்பந்தப்பட்ட நபரின் உடலுக்குச் சுற்றும் மூன்று முறை சுற்றி விடுவதையே ஆரத்தி என்று கூறுகின்றோம். மஞ்சள் மற்றும் சுண்ணாம்புக்கு கிருமிகளை அழிக்கும் திறன் உண்டு என்பதை நாம் கண்டறிந்துள்ளோம். அந்த நபரின் மேல் வந்து சேர்ந்திருக்கும் விஷ அணுக்களை அழிப்பதே ஆரத்தியின் உத்தேசம்.

## பூஜைக்கு இருக்கும்போது ஆவணப்பலகை அவசியமா?

தியானத்துக்கும் பூஜைக்கும் பொதுவாக அமர வேண்டியது ஆவணப்பலகையில் என்று ஒரு விதியுண்டு. பூமியைத் தொடாமல் இருந்து ஜபித்தால் "எர்த்திங்" ஆவதைத் தவிர்க்கலாம் என்பதனால் பலகையில் அமர முன்னோர்கள் கூறிவந்தனர். ஆனால் மந்திர சாஸ்திரப்படி கூரான வடிவமுள்ள ஆவணப் பலகையில் அமர வேண்டும் என்று சேர்க்கப்பட்டது பண்டைக் காலத்து ஆவணப்பலகைகளை ஆராய்ந்து பார்த்தோமானால் கூரானக் கால்களும் வடிவம் காணலாம். அதனால் இதனை கூர்மாசனம் என்று அழைத்திருந்தனர். விஞ்ஞான அடிப்படையில் பார்த்தால் ஆவணப்பலகை மிக அதிகம் பயனளிக்கும் என்று புரிந்து கொள்ளலாம். ஆமணக்கெண்ணை சேர்ந்துய்யகான சகாதி எண்ணை, கிருமி தோஷங்களுக்கு உத்தமம் என்று ஆயுர்வேதம் ஒப்புக் கொள்கின்றது. மேலும் ஆமணக்கின் வேர் ஆஸ்துமா நோய்க்கு நல்லதென்று கண்டுள்ளனர்.

# துளசி

**விஷ்ணுவின்** மனைவியான இலட்சுமியின் குறிப்பீடாக விளங்குவது துளசி. ஐசுவரித்துக்காக இந்த பிரதிரூபத்தை நட்டுவளர்த்து பராமரித்து வருகின்றோம். மிகச் சிறந்த மருத்துவ மூலிகையாக வீடுகளின் முற்றத்தில் துளசித்தரை அமைத்து பாதுகாத்து வருவதுண்டு. இது தேவாசுரர்கள் பால் கடலைக்க கடைந்தபோதும் உயர்ந்து வந்ததாகும். சில இடங்களில் துளசியை விஷ்ணுப்பிரியா என்ற பெயரால் அழைத்து, விளக்கேற்றி பூஜை செய்து வருவதற்கு அதன் மகிமையும் இறைவன் அருகாமையும் ஆகும். மரணத்தைக் கூட அகற்றிப் பாயச்செய்யும் சக்தி துளசிக்கு உண்டு என்று நம் புராணங்கள் கூறுகின்றன. சவத்தை சிதையில் அடக்கும் போது துளசிச் செடியின் சுள்ளிகளை சிதையில் போடுவதுண்டு பாவத்தைப் போக்க துளசிக்கு சக்தியுண்டு என்ற நம்பிக்கையை இச்செயலுக்குத் தூண்டுகின்றது. மேலும் எல்லா தேவதைகளும் துளசியில் வசிக்கின்றனர் என்றும் ஒரு விசுவாசமுண்டு.



சங்கானைக் கல்விக் கோட்டம்
சைவத்திருமுறைவிழாப் போட்டிமுடிவுகள்- 2012

பண்ணிசை (ஆண்)

| தரம் | சுட்டெண் | பாடசாலைபெயர் | மாணவர்பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | 625 | யா/பிளவத்தை அ.மி.த.க.பா | தே.ஜங்கரன் | 01 |
| 1 | 471 | யா/சுழிபுரம் ஐக்கியசங்கசைவவித்தியாலயம் | இ.கேருஜன் | 02 |
| 1 | 375 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | யூ.சகாயராஜா | 03 |
| 2 | 1031 A | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | பி.அபினாஷ் | 01 |
| 2 | 1101 | யா/அராலி இந்துக் கல்லூரி | ந.ஜிலோஜன் | 02 |
| 2 | 376 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | சு.மிதுஷன் | 03 |
| 3 | 1162 | யா/வட்டுமத்தியகல்லூரி | தி.பவித்திரன் | 01 |
| 3 | 711 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | இ.கிருஜன் | 02 |
| 3 | 473 | யா/சுழிபுரம் ஐக்கியசங்கசைவவித்தியாலயம் | சு.யோகசாளன் | 03 |
| 4 | 1033 A | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | க.சந்திரராஜ் | 01 |
| 4 | 156 | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | சு.கார்த்திகன் | 02 |
| 4 | 1163 | யா/வட்டுமத்தியகல்லூரி | ச.கபிலன் | 03 |
| 5 | 379 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | மு.லம்போதரன் | 01 |
| 5 | 04 | யா/பொன்னாலைவரதராஜப் பெருமாள் வித்தி | ஆ.ஸ்ரீரங்கன் | 02 |
| 5 | 1034 A | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | தி.தினுஜன் | 03 |
| 6 | 181 | யா/விக்ரோறியாக் கல்லூரி | த.சியாமளன் | 01 |

மனனம் (ஆண்)

| தரம் | சுட்டெண் | பாடசாலைபெயர் | மாணவர்பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | 720 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | சு.செந்தாளன் | 01 |
| 1 | 259 | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | சி.சரண்ராஜ் | 02 |
| 1 | 1171 | யா/வட்டுமத்தியகல்லூரி | ஞா.துவாரகன் | 03 |
| 2 | 721 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | க.தருண் | 01 |
| 2 | 427 | யா/மூளாய் அ.மி.த.க.பா | அ.திலக்சன் | 02 |
| 2 | 352 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | க.சந்தோஷ் | 03 |
| 3 | 1113 | யா/அராலி இந்துக் கல்லூரி | த.சுஜீவதாஸ் | 01 |
| 3 | 1173 | யா/வட்டுமத்தியகல்லூரி | ய.கரிசிகன் | 02 |
| 3 | 722 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | வி.கீர்த்தனன் | 03 |
| 4 | 1174 | யா/வட்டுமத்தியகல்லூரி | த.அபிநாத் | 01 |
| 4 | 723 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | எ.இந்துஷன் | 02 |
| 4 | 1114 | யா/அராலி இந்துக் கல்லூரி | யோ.கௌரீசன் | 03 |
| 5 | 1045A | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | லோ.ஸ்ரீஹீரன் | 01 |
| 5 | 724 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | பா.பபசாந் | 02 |
| 5 | 979 | யா/வட்டுசுப்பிரமணியாவித்தி | இ.இராமலக்ஷ்மன் | 03 |
| 6 | 1046A | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | ச.கஜநாத் | 01 |
| 6 | 725 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | நா.பிரகலாதன் | 02 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 1176 | யா/வட்டுமத்தியகல்லூரி | ம.ஜெயசுதன் | 03 |
| 7 | 189 | யா/விக்ரோறியாக் கல்லூரி | பொ.இன்னிசைத்தமிழன் | 01 |
| 7 | 1047A | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | செ.சிவபாலன் | 02 |
| 7 | 357 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | இ.திவாகரன் | 03 |
| 8 | 1048A | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | லோ.ஸ்ரீகர்சன் | 01 |
| 8 | 166 | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | கு.சரவணன் | 02 |
| 8 | 104 | யா/சித்தன்கேணி ஸ்ரீகணேசாவிதியாசாலை | ச.சஜீவன் | 03 |
| 9 | 1119 | யா/அராலி இந்துக் கல்லூரி | ம.அயூரன் | 01 |
| 9 | 1049 A | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | பி.பிரதீஸ் | 02 |
| 9 | 728 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | இ.ரூபலக்ஸ்மன் | 03 |
| 9 | 359 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | த.நிறஞ்சன் | 03 |
| 10 | 245 | யா/சங்கானைசிவப்பிரகாசமகாவித்தியாலயம் | ஐ.மதுசன் | 01 |
| 10 | 729 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | ஏ.வித்தகன் | 02 |
| 10 | 1180 | யா/வட்டுமத்தியகல்லூரி | க.மயூரன் | 03 |
| 11 | 193 | யா/விக்ரோறியாக் கல்லூரி | ர.நிரோசன் | 01 |
| 11 | 269 | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | பி.பிரசாந் | 01 |
| 11 | 730 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | ந.சுலோஜன் | 03 |
| 12 | 731 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | ச.சஞ்சயன் | 01 |
| 12 | 1182 | யா/வட்டுமத்தியகல்லூரி | ம.நிரோசன் | 02 |

பண்ணிசை (பெண்)

| தரம் | சுட்டெண் | பாடசாலைபெயர் | மாணவர்பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | 1061 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | ச.அபிராமி | 01 |
| 1 | 884 | யா/அராலிமுருகமூர்த்திவித்தியாலயம் | இ.தர்சியா | 02 |
| 1 | 1192 | யா/வட்டுமத்தியகல்லூரி | தெ.சங்கவி | 03 |
| 2 | 1062 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | இ.நிருத்திகா | 01 |
| 2 | 387 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | மு.ரேவதி | 02 |
| 2 | 321 | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | செ.தச்சாயினி | 03 |
| 3 | 1063 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | தி.பிரியந்தினி | 01 |
| 3 | 678 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | தி.யதுசா | 02 |
| 3 | 1194 | யா/வட்டுமத்தியகல்லூரி | வி.விதுஷா | 03 |
| 4 | 486 | யா/சுழிபுரம் ஐக்கியசங்கசைவவித்தியாலயம் | கி.தர்சீகா | 01 |
| 4 | 1064 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | இ.கிருசனா | 02 |
| 4 | 134 | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | சி.சிவதாரணி | 03 |
| 5 | 1065 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | க.காருண்யா | 01 |
| 5 | 259 | யா/சங்கானைசிவப்பிரகாசமகாவித்தியாலயம் | வி.சோபிதா | 02 |
| 5 | 680 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | ப.யதுஷா | 03 |
| 6 | 681 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | சு.கிஷானி | 01 |
| 6 | 1066 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | க.மகிழினி | 02 |
| 6 | 325 | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | ம.ஜனனி | 03 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 1198 | யா/வட்டுமத்தியகல்லூரி | தி.சுகந்தினி | 01 |
| 7 | 203 | யா/விக்ரோறியாக் கல்லூரி | பா.பானுஷா | 02 |
| 7 | 1067 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | ப.சங்கவி | 03 |
| 8 | 1068 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | கு.புஷாயினி | 01 |
| 8 | 683 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | செ.சுதர்சினி | 02 |
| 8 | 1199 | யா/வட்டுமத்தியகல்லூரி | தி.தாரணி | 03 |
| 9 | 1069 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | இ.இலக்கியா | 01 |
| 9 | 31 | யா/பொன்னாலைவரதராஜப் பெருமாள் வித்தி | ச.சரங்கா | 02 |
| 9 | 205 | யா/விக்ரோறியாக் கல்லூரி | பெ.கஜீதா | 03 |
| 9 | 138 | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | மு.சர்மினி | 03 |
| 10 | 1070 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | க.சாரதா | 01 |
| 10 | 329 | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | சி.பைரவி | 02 |
| 10 | 685 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | க.கார்த்திகா | 03 |
| 11 | 330 | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | கு.ஜனனி | 01 |
| 11 | 1263 | யா/வட்டு இந்துக் கல்லூரி | பு.சங்கீர்த்தனா | 02 |
| 11 | 207 | யா/விக்ரோறியாக் கல்லூரி | சு.பங்கஜா | 03 |
| 12 | 1264 | யா/வட்டு இந்துக் கல்லூரி | வே.மேனுஜா | 01 |
| 12 | 1202 A | யா/வட்டுமத்தியகல்லூரி | சி.தஸ்மினி | 02 |
| 12 | 208 | யா/விக்ரோறியாக் கல்லூரி | ப.சிவப்பிரியா | 03 |

மனனம் (பெண்)

| தரம் | சுட்டெண் | பாடசாலைபெயர் | மாணவர்பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| 1 | 688 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | கு.ஸசிந்தவி | 01 |
| 1 | 139 | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | அ.அக்ஷயா | 02 |
| 1 | 1203 | யா/வட்டுமத்தியகல்லூரி | ஜெ.பானுப்பிரியா | 03 |
| 2 | 1074 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | இ.நிருத்திகா | 01 |
| 2 | 689 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | கௌ.அபினா | 02 |
| 2 | 267 | யா/சங்கானைசிவப்பிரகாசமகாவித்தியாலயம் | ஆ.நிதர்சனா | 03 |
| 3 | 690 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | யோ.டிலக்சிகா | 01 |
| 3 | 1075 A | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | தி.பிரியந்தி | 02 |
| 3 | 891 | யா/அராலிமுருகமூர்த்திவித் | இ.மதுஷியா | 03 |
| 4 | 691 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | ர.தர்சிகா | 01 |
| 4 | 269 | யா/சங்கானைசிவப்பிரகாசமகாவித்தியாலயம் | ஜெ.தனுஸ்யா | 02 |
| 4 | 142 | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | சி.லக்சிகா | 03 |
| 5 | 492 | யா/சுழிபுரம் ஐக்கியசங்கசைவவித்தியாலயம் | ப.கேஷானி | 01 |
| 5 | 1207 | யா/வட்டுமத்தியகல்லூரி | வி.ஷிபித்தா | 02 |
| 5 | 143 | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | ச.சண்முகப்பிரியா | 03 |
| 6 | 693 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | க.கேஹுகா | 01 |
| 6 | 337 | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | இ.ஆரணி | 02 |
| 6 | 1208 | யா/வட்டுமத்தியகல்லூரி | ஜெ.பிரித்திகா | 03 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 1079 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | து.ரூபவதனா | 01 |
| 7 | 368 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | க.ஸ்வர்ணா | 02 |
| 7 | 272 | யா/சங்கானைசிவப்பிரகாசமகாவித்தியாலயம் | சி.பவிதா | 03 |
| 8 | 146 | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | சி.பிரவீனா | 01 |
| 8 | 1210 | யா/வட்டுமத்தியகல்லூரி | ஜெ.வினோதினி | 02 |
| 8 | 695 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | நா.நங்கவி | 03 |
| 9 | 370 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | வே.கீர்த்தனா | 01 |
| 9 | 1081 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | ச.தர்சிகா | 02 |
| 9 | 696 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | ஞா.அபர்ணா | 03 |
| 9 | 147 | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | த.நிவாசினி | 03 |
| 10 | 697 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | சு.மீரா | 01 |
| 10 | 213 | யா/விக்ரோறியாக் கல்லூரி | இ.கார்த்திகாயினி | 02 |
| 10 | 1273 | யா/வட்டு இந்துக் கல்லூரி | ஸ்ரீ.சர்மிலா | 03 |
| 11 | 214 | யா/விக்ரோறியாக் கல்லூரி | கு.நிருஜா | 01 |
| 11 | 698 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | நா.சங்கவி | 02 |
| 11 | 1083 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | ந.மகாராணி | 03 |
| 12 | 1084 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | ம.தட்சாயினி | 01 |
| 12 | 699 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | பே.தர்ஷா | 02 |

## வினாடிவினாப் போட்டிமுடிவுகள் - 2012

ஆண்

| தரம் | பாடசாலைபெயர் | நிலை |
|---|---|---|
| 4 – 5 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | 01 |
| | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | 02 |
| | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | 03 |
| 6 - 7 | யா/சங்கானைசிவப்பிரகாசமகாவித்தியாலயம் | 01 |
| | யா/வட்டு இந்துக் கல்லூரி | 02 |
| | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | 03 |
| 8 - 9 | யா/விக்ரோறியாக் கல்லூரி | 01 |
| | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | 02 |
| | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | 03 |
| 10 - 11 | யா/வட்டுமத்தியகல்லூரி | 01 |
| | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | 02 |
| | யா/வட்டு இந்துக் கல்லூரி | 03 |

பெண்

| தரம் | பாடசாலைபெயர் | நிலை |
|---|---|---|
| 4 – 5 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | 01 |
| | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | 02 |
| | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | 03 |

| | | |
|---|---|---|
| 6 - 7 | யா/வட்டுமத்தியகல்லூரி | 01 |
| | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | 01 |
| | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | 03 |
| 8 - 9 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | 01 |
| | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | 02 |
| | யா/அராலி இந்துக் கல்லூரி | 03 |
| 10 - 11 | யா/வட்டுமத்தியகல்லூரி | 01 |
| | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | 02 |
| | யா/வட்டு இந்துக் கல்லூரி | 03 |
| 12 — 13 | யா/வட்டு இந்துக் கல்லூரி | 01 |

## தொண்டுபடும் செயன்முறைபோட்டிமுடிவுகள் - 2012

(ஆண்கள்)

| தரம் | சுட்டெண் | பாடசாலைபெயர் | மாணவர்பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| | | மாலை | | |
| 04 | 270 | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | ஆ.திசாகன் | 01 |
| 04 | 1183 | யா/வட்டுமத்தியகல்லூரி | ச.கபிலன் | 02 |
| 04 | 247 | யா/சங்கானைசிவப்பிரகாசமகாவித்தியாலயம் | ம.கிரிசன் | 03 |

| | | | | |
|---|---|---|---|---|
| தோரணம் | | | | |
| 05 | 733 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | வி.டிலக்சன் | 01 |
| 05 | 1246 | யா/வட்டு இந்துக் கல்லூரி | கு.நிலக்சன் | 02 |
| 05 | 271 | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | ஆ.டிசாந் | 03 |
| சரம் | | | | |
| 06 | 399 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | க.பிரணவன் | 01 |
| 06 | 734 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | வி.லஷ்சன் | 02 |
| மாலைகட்டுதல் | | | | |
| 07 | 400 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | ம.கஜந்தன் | 01 |
| 07 | 1186 | யா/வட்டுமத்தியகல்லூரி | கு.தினுசன் | 02 |
| 07 | 19 | பொன்னாலைவரதராஜப் பெருமாள் | ச.தனுசன் | 03 |
| புஜமாலை | | | | |
| 08 | 197 | யா/விக்ரோறியாக் கல்லூரி | த.நிலக்சன் | 01 |
| 08 | 102A | யா/சித்தன்கேணி ஸ்ரீகணேசாவிதியாசாலை | ச.சஜீவன் | 02 |
| 08 | 251 | யா/சங்கானைசிவப்பிரகாசமகாவித்தியாலயம் | தெ.ஆனந்தகோபன் | 03 |
| பூக்கோலம் | | | | |
| 09 | 198 | யா/விக்ரோறியாக் கல்லூரி | த.ஸ்ரீரங்கன் | 01 |
| 09 | 737 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | இ.ரூபலக்ஸ்மன் | 02 |

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | 1057 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | உ.பிரதியுனன் | 03 |
| தானியக்கோலம் | | | | |
| 10 | 1189 | யா/வட்டுமத்தியகல்லூரி | தி.கோகுலன் | 01 |
| 10 | 199 | யா/விக்ரோறியாக் கல்லூரி | த.பிரணவன் | 01 |
| 10 | 592 | யா/சுழிபுரம் வடக்குஆறுமுகவித்தி | செ.கஜிந்தன் | 02 |
| 10 | 738 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | தி.தினிஸ்ரன் | 03 |
| தேங்காய்ப்பூக்கோலம் | | | | |
| 11 | 739 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | பா.கௌதமன் | 01 |
| 11 | 1059 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | ந.நவலஜன் | 02 |
| 11 | 1190 | யா/வட்டுமத்தியகல்லூரி | நி.பகீரதன் | 03 |
| மாக்கோலம் போடுதல் | | | | |
| 12,13 | 201 | யா/விக்ரோறியாக் கல்லூரி | தி.சுஜிதரன் | 01 |
| 12,13 | 740 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | சு.லக்ஸ்மன் | 02 |
| 12,13 | 1191 | யா/வட்டுமத்தியகல்லூரி | க.லுகேசன் | 03 |

(பெண்கள்)

| தரம் | சுட்டெண் | பாடசாலைபெயர் | மாணவர்பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| மாலை | | | | |
| 04 | 1085 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | பு.விதுஷா | 01 |
| 04 | 405 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | வி.டிசாளினி | 02 |
| 04 | 492 | யா/சுழிபுரம் ஐக்கியசங்கசைவவித்தியாலயம் | ந.கிருஷா | 03 |

| | | | | |
|---|---|---|---|---|
| தோரணம் | | | | |
| 05 | 345 | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | சி.சிவலக்சுமி | 01 |
| 05 | 968 | யா/வட்டுகார்த்திகேயாவித்தி | வி.சிந்துஜா | 02 |
| 05 | 1086 | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | யா.மாதங்கி | 03 |
| 05 | 465 | யா/சுழிபுரம் கிழக்குஅ.மி.த.க | வ.டெஸ்மிகா | 03 |
| சரம் | | | | |
| 06 | 150 | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | ச.கோகுலவதனி | 01 |
| 06 | 346 | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | பா.விதுசிகா | 01 |
| 06 | 407 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | மோ.நிதர்சிகா | 02 |
| 06 | 702 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | ச.தர்சிகா | 03 |
| மாலைகட்டுதல் | | | | |
| 07 | 151 | யா/தொல்புரம் விக்னேஸ்வராவித்தியாலயம் | த.திலக்சிகா | 01 |
| 07 | 217 | யா/விக்ரோறியாக் கல்லூரி | செ.சுகன்ஜா | 02 |
| 07 | 1218 | யா/வட்டுமத்தியகல்லூரி | இ.யாழினி | 03 |

| | | | | |
|---|---|---|---|---|
| புஜமாலை | | | | |
| 08 | 218 | யா/விக்ரோறியாக் கல்லூரி | த.துஷ்யந்தி | 01 |
| 08 | 348 | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | வ.கிஷாந்தி | 02 |
| 08 | 126 | யா/சித்தன்கேணி ஸ்ரீகணேசாவிதியாசாலை | சி.ஜெனிஷா | 03 |
| பூக்கோலம் | | | | |
| 09 | 346A | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | செ.விதுஸ்ரலா | 01 |
| 09 | 127 | யா/சித்தன்கேணி ஸ்ரீகணேசாவிதியாசாலை | க.சாயிதா | 02 |
| 09 | 45 | யா/பொன்னாலைவரதராஜப் பெருமாள் வித்தி | பு.றாதிகா | 03 |
| தானியக்கோலம் | | | | |
| 10 | 1221 | யா/வட்டுமத்தியகல்லூரி | இ.கோபினா | 01 |
| 10 | 706 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | அ.மீரா | 02 |
| 10 | 1157 | யா/அராலி இந்துக் கல்லூரி | த.டென்சிகா | 03 |
| 10 | 220 | யா/விக்ரோறியாக் கல்லூரி | மோ.பபிஷ்ரா | 03 |
| தேங்காய்ப்பூக்கோலம் | | | | |
| 11 | 567 | யா/சுழிபுரம் வடக்குஆறுமுகவித்தி | ஈ.சர்மினி | 01 |
| 11 | 412 | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | ர.உஷாநந்தினி | 02 |
| 11 | 707 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | நா.சங்கவி | 03 |
| 11 | 1222 | யா/வட்டுமத்தியகல்லூரி | நே.வனஜா | |

| | | | | |
|---|---|---|---|---|
| மாக்கோலம் போடுதல் | | | | |
| 12,13 | 708 | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | நி.கனிஸ்டா | 01 |
| 12,13 | 1223 | யா/வட்டுமத்தியகல்லூரி | இ.துர்க்கா | 02 |
| 12,13 | 222 | யா/விக்ரோறியாக் கல்லூரி | க.கார்ஜாயினி | 03 |

திறந்தபோட்டி

| தரம் | சுட்டெண் | பாடசாலைபெயர் | மாணவர்பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| புராணபடனம் | | | | |
| 06 - 09 | Q | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | க.கேனுகா<br>சு.கிஷ்ானி | 01 |
| | H | யா/மூளாய் சைவப்பிரகாசாவித்தியாசாலை | கி.சாணுகா<br>க.கிருஷ்ணவேனி | 02 |
| | AA | யா/வட்டுமத்தியகல்லூரி | த.லோஜினி<br>தி.தாரணி | 03 |
| 10 - 13 | Q | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | தி.கலைச்செல்வி<br>ஜெ.சாருகா | 01 |
| | G | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | தி.ஜனனி<br>த.மிதுஷனா | 02 |
| | D | யா/விக்ரோறியாக் கல்லூரி | ப.சிவப்பிரியா<br>பா.லசின்தா | 03 |

| கதாப்பிரசங்கம் | | | | |
|---|---|---|---|---|
| 09 - 13 | Q | யா/அராலிசரஸ்வதிமகாவித்தியாலயம் | வி.அன்னலட்சுமி | 01 |
| | AA | யா/வட்டுமத்தியகல்லூரி | ச.அபிராமி | 02 |
| | D | யா/விக்ரோறியாக் கல்லூரி | | 03 |

ஆரம்ப்பிரிவுநாடகம்

| தரம் | சுட்டெண் | பாடசாலைபெயர் | நிலை |
|---|---|---|---|
| 03 - 05 | G | யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் | 01 |
| | Y | யா/யாழ்ப்பாணக் கல்லூரி | 02 |
| | AA | யா/வட்டுமத்தியகல்லூரி | 03 |

குறிப்பு :-❋ 03.12.2012இற்கு முன்னர்திருத்தங்கள் இருப்பின் அறியத்தரவும்.

❋ இறுதிப் பரிசளிப்புவைபவம் 08.12.2012 காலை 8.30 மணிக்குசங்கானைசிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறும் அன்றைதினம் சகலமாணவர்களும் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

❋ தரம் 10,11, 12,13 வினாடிவினாப் போட்டிகள் 03.12.2012 பி.ப 2.00 மணிக்கு வட்டு மத்திய கல்லூரியில் நடைபெறும்.




<u>மலர் வெளியீடு அனுசரணை:</u>
மக்கள் வங்கி,
சங்கானைக் கிளை,
சங்கானை.

<u>வெளியீடு:</u> சைவகலாசார மேம்பாட்டுப்பேரவை
சங்கானை கல்விக்கோட்டம்

08.12.2012